திராவிட நாடு பிரிவினை நாள் மலர் (17-9-55) விலை அணா 4.

தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

தர்க்க வாதி

பெரியார்

1924! நாட்டிலே சுயமரியாதைக் கருத்துக்களைப் பரப்பு முகத்தான் ஈரோட்டில் 'குடியரசு' இதழ் ஆரம்பிக்கப்பட்ட காலம் அது. அந்தக் காலத்தில் கொள்கையளவிலே நமக்கு நேரடி விரோதிகளாக இருந்தவர்கள், சைவப்பற்று மிக்கோரும், தமிழ்ப் பண்டிதர்களும்தான். அவர்களுக்கெல்லாம் உடனுக்குடன் தக்க பதில் தந்து சுயமரியாதைக் கருத்துக்களை வாகை சூடச் செய்தவர் மதிப்பிற்குரிய சாமி கைவல்யம் அவர்கள் ஆவார். அத்தகைய சுயமரியாதைச் செல்வத்தைப் பற்றி, 1931ல், அவர் எழுதிய புத்தகத்திற்கு பெரியார் அவர்கள் எழுதிய முன்னுரையைக் கீழே தந்திருக்கிறோம். பெரியார் அவர்களின் தனி நடையையும், சாமி கைவல்யம் அவர்களின் வைர உள்ளத்தையும் இந்தக் கட்டுரை விளக்குகிறது. பயனுண்டு-படியுங்கள்.

திரு. கைவல்ய சாமியார் அவர்கள் "சோழிய வேளாள ஜாதி" என்பதைச் சேர்ந்தவர்கள், அவரது முன்னோர்கள் பட்டாளத்தில் இருந்தவர்கள், தந்தையாரும் சகோதரர்களும் சுக ஜீவிகளாயும் வேதாந்த விசாரணை பாண்டித்யம் முதலியவைகளில் மிக்க பரிச்சிய முடையவர்களாகவு மிருந்தவர்கள். திரு. கைவல்ய சுவாமியார் ஈஸ்வர வருஷம் ஆவணி மாதம் எட்டாம் தேதி மலையாளத்தைச் சேர்ந்த கள்ளிக்கோட்டையில் பிறந்தவர், அவர் தமது ஐந்தாம் வருஷம் வரை கள்ளிக்கோட்டையிலிருந்து, பிறகு ஐந்து முதல் பதினோராம் வருஷம் வரை பாலக்காட்டிலும், பதினொன்று முதல் பதினான்கு வரை மதுரையிலும், பதினான்கு முதல் பதினெட்டு வரை திருச்சி யிலுமிருந்தவர். திருச்சியில் இரண்டாவது பாரம் வரையில் படித்து விட்டுப் பள்ளிக்கூடம்விட்டு விரக்தியின் மீது கோயமுத்தூர் ஜில்லாவுக்கு வந்து விட்டார். இந்த நிலைவரையில் அவருடைய பெயர் பொன்னுசாமி என்றும், செல்லப் பெயர் பொன்னு என்பதாகவும் அழைக்கப்பட்டது. இதன் பிறகு இந்தியா முழுதும் சாமியாராய் யாத்திரை செய்தார்.

இப்படி இருக்கையில் இவருக்குக் கைவல்ய சாமியார் என்று பெயர் வந்த விதம் எப்படி என்றால் இவரது சுற்றுப் பிரயாண யாத்திரையில் கரூருக்குச் சென்றிருந்த சமயம் அங்குள்ள மௌனசாமி மடத்திற்குப் போயிருந்தார். அந்த மடத்தில் உள்ள சாமியாரிடம் பலர் வேதாந்த விசாரணைக்கு வந்து பல விஷயங்கள் தெரிந்து போவதில் கைவல்ய நூலைப்பற்றியும் பலர் பேசுவதுண்டு. அப்பொழுது திரு கைவல்ய சாமியார் அதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு சற்று, அதிகமான தர்க்கம் புரிவார். அந்தக் காரணத்தால் இவரை இவர் இல்லாத சமயத்தில் அங்கு வந்தவர்களில் ஒருவர் "கைவல்ய சாமியார் எங்கே?" என்று கேட்டார். அந்த சமயம் இவரும் அங்கு வர, அங்கிருந்த பலர் "இதோ கைவல்ய சாமியார் வந்து விட்டார்" என்றார்கள். அது முதல் அவருக்கு அந்தப் பெயர் வழங்கி வந்ததாகும். எந்தக் காரணத்தாலேயோ அவருக்குத் தர்க்க உணர்ச்சி ஏற்பட்டது முதல் பார்ப்பன மதக் கொள்கைகளை வெறுப்பதும் அது சம்பந்தமான ஆதாரங்களைப் பற்றி தர்க்கித்து வருவதும் அவருக்கு ஆரம்பத்திலேயே ஒரு ஊக்கமுள்ள பழக்கமாகி விட்டது. அந்தக்காலத்தில் சங்கராச்சாரியார் கோயமுத்தூர் ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செல்லுமிடங்களில் எல்லாம் சென்று அவருக்கு எதிரிடையாகப் பிரச்சாரம் செய்வதும் அவர்மதக் கொள்கையை கண்டிப்பதும், முக்கியமாய் பராசரஸ்மிருதிக்கும் மனுதர்ம சாஸ்திரத்திற்கும் விரோதமாகப் பேசுவதுமான வேலைதான் அவர் முதன் முதல் வெளியிறங்கிப் பிரசாரம் செய்த வேலையாகும்

இந்த நிலையில் கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்களும் சற்று எழுத்து வாசனையும் நகரப்புழக்கமுமுள்ள மிராசுதாரர்களும் சுவாமியாருக்கு ரொம்பவும் பழக்க மேற்பட்டு இவரிடம் பேசிக்கொண்டிருப்பதில் அவர்களுக்கு ஒரு திருப்தியும் சந்தோஷமும் உண்டாகி யாரும் வெகு கிராக்கியாய் சுவாமியாரைத் தேடுவதும், கூட அழைத்துக்கொண்டு போவதும் நன்மை தீமைகளுக்கு அழைப்பதுமான நிலைமை ஏற்பட்டது. இதோடு சற்று வைத்தியமும் ஆராய்ச்சியும் தெரிந்திருந்ததனால் சாதாரண மக்களும் சுவாமியாரைத் தேடித் திரிவதாயிற்று. இவ்வளவோடு மாத்திரமல்லாமல் இந்த ஜில்லாவில் வந்து மிராசுதாரர்களிடம் கவி பாடி கௌரவ யாசகம் வாங்கும் பண்டிதர்கள் புலவர்கள், வித்துவான்கள், புராண இதிகாசப் பிரசங்கிகள் முதலியவர்களும் சுவாமியாரைக் கண்டால் சற்றுப் பயப்படவேண்டியதாகவும் ஏற்பட்டது, ஏனெனில் ஜில்லாவிலுள்ள எல்லாப் பெரிய மனிதர்களும் மிராசுதாரர்களும் சாமியாரைச் சிநேகிதர்போல் பாவித்து மிக்க நெருக்கமாகவும் மரியாதையாகவும் பழகினதால் மேல்படி பண்டிதர்கள் இவர் தயவில்லாவிட்டால் **சரியானபடி பிச்சை கிடைக்காதே என்கின்ற பயத்தால்** இவருக்கு அதிக மரியாதை செய்வார்கள். புராணப் பிரசங்கங்கள் புராணப் படங்கள் நடக்கும் இடத்திற்குக் கைவல்ய சுவாமியார் போய் விட்டால் எல்லோரும் சாமியாரையே பார்ப்பார்கள். புராணப் பிரசங்கப் பண்டிதருக்கும் நாக்கில் ஜலம் வற்றிப்போகும்; தொண்டை வரண்டு போகும். இந்த நிலையில் மிக்க பிரக்கியாதியாய் விட்டதோடு தானாகவே அநேக சாஸ்திரங்கள் பார்த்திருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

இது இப்படியிருக்க, அந்தக்காலத்தில் ஈரோட்டில் நம் வீடானது வித்வான்களுக்கும் பாகவதர்களுக்கும் சற்றுத் தாராளமாய் வந்து போகக் கூடியதான வீடாய் இருந்ததாலும் அவர்களை நம் வீட்டார்களும் பிரியமாய் வரவேற்று சற்று மரியாதை செய்து பக்தி காட்டுகின்ற வழக்கமாயிருந்ததாலும் நம் வீட்டிலும் நான் அடிக்கடி பல வித்வான்களையும் பாகவதர்களையும் சந்திப்பதும் அவர்களிடம் சற்று வாய்த்துடுக்காய் ஏதாவது பல விஷயங்களைப்பற்றி பேசுவதுமான ஒரு குணம் நமக்கும் எப்படியோ பழக்கத்தில் வந்து விட்டது. நான் கடையில் எனது தகப்பனாருக்கு அடங்கிய காரியஸ்தனாகயிருந்தாலும் சாயந்திரமானால் பலருடன் சேர்ந்து அரட்டையடிப்பதும் அந்த அரட்டை முழுவதும் புராணங்களைப்பற்றித் தர்க்கம் பண்ணுவதும் மற்றவர்கள் சிரிப்பதுமாகவேயிருந்தது. இந்தக் கூட்டத்தில் ஒரு நாள் கைவல்ய சுவாமியார் அவர்கள் எனக்கும் அவருக்கும் பொதுவான சில நண்பர்களோடு விஜயம் செய்தார். அது 1903-ம் வருஷம். அந்தக் காலத்தில் எனக்கும் அவருக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பே எம்மிருவருக்குள்ளும் தர்க்கமேற்படத்தக்கதாயிருந்தது, அந்தத் தர்க்கம் ஒருவருக் கொருவர் அதிருப்தியோடு கலையவேண்டியதானாலும், பிறகு அடிக்கடி பொது இடங்களில் இருவரும் சந்திக்க ஏற்பட்டதினாலும் ஜாதிமத சாஸ்திர சம்பந்தமான அபிப்பிராய ஒற்றுமையினாலும் இருவருக்கும் அதிக சிநேகமாகி ஒன்று இரண்டு வருஷங்களுக்குள் ஈரோட்டிற்கு வந்தால் நம் வீட்டிற்கே வரும்படியான நிலைமையும், நெருங்கிய சிநேகமும் ஏற்பட்டு விட்டது.

பிறகு, காலம் நேரமில்லாமல் எப்போது பார்த்தாலும் இந்த விஷயங்களிலேயே அதிக நேரம் செலவழிக்க நேர்ந்தது. 15,20 வருஷத்திற்கு முன் ஒரு சமயம் ஏனப்பள்ளி ஜமீன்தார் கலியாணத்திற்கு நாங்கள் இருவரும் சென்றிருக்கும்போது சாப்பாட்டுப் பந்தியில் பரிமாறின பார்ப்பனன் ஒருவனைத் தாகத்திற்கு தண்ணீர் கேட்கும் போது அவன் நம்மிடம் கீழே இருந்த டம்ளரைக் கையில் எடுத்தான், உடனே பக்கத்திலிருந்த மற்றொரு பார்ப்பன சமையல்காரன் இந்தப் பார்ப்பானைப் பார்த்து "என்னடா மடையா? சூத்திரன் குடித்த டம்ளரை கையில் தொட்டு எடுத்து விட்டாய்" என்று கோபமாய்ப் பேசினான். உடனே கைவல்ய சாமியார் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் எழுந்து எச்சில் கையாலேயே அந்தப் பார்ப்பனனை ஒரு அறை செவுளியில் அறைந்து "யாரடா சூத்திரன்?" என்று கேட்டார். அப்போது ஒரு சிறு கலகமாகி பிறகு அந்தப் பார்ப்பனன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். இந்த மாதிரி பல சம்பவங்கள் உண்டு.

தேர், திருவிழா, கோயில் செலவு, விக்ரக பூசை இவைகளே இந்த நாட்டுக்குப் பெரும் க்ஷயரோகம் போன்ற வியாதி என்று சதா சொல்லிவருவார். பார்ப்பனீய சடங்குகளின் புரட்டுகளைச் சிறிதும் தாக்ஷண்ணிய மில்லாமல் எப்பேர்ப்பட்டவர்களுடனும் தர்க்க ரீதியாய் எடுத்துச் சொல்லுவார், இவ்வளவுக்கு மதிப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணம் அவர் தனக்கென்று இடுப்பு வேஷ்டியைத் தவிர சாப்பாட்டைத்தவிர வேறு ஒரு சாதனத்தையும் விரும்பினதுமில்லை; வைத்துக் கொண்டிருந்ததுமில்லை. ஆதலால் அவரைப்பற்றி யாரும் ஒன்றும் சொல்ல முடியாமல் போயிற்று. இதுவே அவரைப் பற்றி நமக்குத் தெரிந்த சேதிகளாகும். மற்றப்படி அவர் எழுதி வந்த சாஸ்திர ஆராய்ச்சி சம்பந்தமான விஷயங்களை நாம் வெளிப்படுத்தி வந்ததற்குக் காரணம் என்ன வென்றால், நாம் எடுத்துக் கொண்ட முயற்சியில் நம்மால் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வரும் விஷயங்கள் எல்லாம் சற்று ஏறக்குறைய நமது சொந்த அநுபவமும் பொது பகுத்தறிவுக்குட்பட்டது மாகவேயிருப்பதால் அவை முழுதும் யுக்தி அநுபவக்காரர்களுக்குப் போதியதாகவோ அல்லது விவகரிக்கக்கூடியதாகவோ இருந்தாலும் சுருதிகளைப் பிரமாதமாய் எண்ணிக் கொண்டிருக்கின்ற மக்களுக்கும் அதில் ஊறிப் பிழைக்கின்ற மக்களுக்கும் அதன் மூலமாகவும் உண்மை வெளியாகட்டும் என்கிற எண்ணத்தின் பேரிலேயே புராண சாஸ்திர இதிகாசங்களிலுள்ள விஷயங்களையும் வெளியாக்கி அந்த முறையிலும் நமது கொள்கைகளை மெய்ப்பிக்க இவற்றை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற ஆசைகொண்டே அவற்றை வெளியிட்டு வந்தோம். சுவாமியார் அவர்களும் அந்தக்கருத்தின் மீதே எழுதி வந்தார். ★

சரித்திரக் காட்சிகள்

பகட்டுக்கும், பளபளப்புக்கும் நிலைக்களனாய் விளங்கிய பாரிஸ் நகரம் 18-ம் நூற்றாண்டின் இறுதியில் மிகப்பயங்கரமாகக் காட்சியளித்தது. சிரச்சேதங்கள் நூற்றுக்கணக்கில் தொடங்கப்பட்டு சில நாட்களில் ஆயிரக்கணக்கில் நடைபெறத் தொடங்கியது கேட்டு ஐரோப்பாவே அதிர்ச்சியுற்றது. ஆளும்பரம்பரைக்கும் அதை அண்டிப் பிழைத்து மக்களை வாட்டிய பிரபுக்களுக்கும் மடாதிபதிகளுக்கும் மரண தண்டனைக்குக் குறைவான தண்டனை கிடையாது. தண்டனைபெற அவர்கள் செய்த குற்றம்? குற்றச் சாட்டுகளைப் பட்டியலாக்க வேண்டிய அவசியம் இல்லாத வாறு, மன்னர் குடும்பம், பிரபுக்கள் குடும்பம், மடத்தின் அதிபதிகள் என்ற வகைகளே பஞ்சமாபாதகங்களில் திளைத்த பாதகர்களையும், கொடுமைகள் அனைத்தும் புரிந்தோரையுமே குறித்தன.

பிரான்சிலே நடை பெற்ற அந்தப் பிரம்மாண்ட மான புரட்சியில் மக்கள் கரம் ஓங்கி நின்றது. அரண்மனையும், மாளிகைகளும் எளிதில் மக்கள் வசமாயின. ஆணவக் கூட

ஈ.வே.கி.சம்பத்

டம் அது வரை மக்களை அச்சுறுத்த அமைத்திருந்த கொடுமை மிகு சிறைச்சாலைகளும், சித்திரவதைக் கூடங்களும் இருந்த இடம் தெரியாமல் தூள் தூளாக்கப்பட்டன.

ரூஸ்ஸோ
வால்டேர்
மான்டெஸ்க்யூ
டிடிராட்
டி ஹால்பாக்

இந்தப் பெயர்கள் வெறும் பெயர்கள் அல்ல. சிந்தனைத்திருவிளக்குகள், கருத்துக் கருவூலங்கள், எண்ணக் கோட்டைகள், விடுதலை ஆர்வம் பெருக்கெடுக்கும் வீர ஊற்றுக்கள், புரட்சிப் பொறிகள், என்று எவ்வளவு புகழ்ந்தாலும் அவைகளுக்குத் தகுதியான பிரான்சின் இந்தப் பெரியவர்களை உலகம் இன்னும் நினைந்து மகிழ்கிறது. பயனும் பெற்றுயகிறது. இவர்கள் பொழிந்த புதுக்கருத்துக்கள் தூங்கிக் கிடந்த பிரான்ஸை விழிப்படையச் செய்தன. மணி முடியையும், மன்னனையும், மடத்தையும், அதன் அதிபர்களையும், பிரபுத்வத்தையும், அதன் காவலர்களையும் தவிடுபொடியாக்கி மக்கள் அரசை மலரச் செய்த இவர்களன்றோ, மகான்கள்! கொடுமைத் தீயிலும் வேதனைப் புயலிலும் உழன்று உயிர் வாதையனுபவித்துக் கிடந்த மக்களை, நல் வாழ்வுக்குரியவர்களாய், சாகாத் தலை முறையினரை ஆக்கிய பெரியார்களைப் பிரான்ஸ் மட்டு மன்றி உரிமை வேட்கையில் திளைத்துள்ள இவ்வுலகம் முழுமையும் என்றும் மறவாது.

அவர்களது உள்ளங்களே எஃகுக் கோட்டைகள். படைவரிசைகள் ஊற்றெடுக்கும் எண்ணங்கள். ஆயுதம் பேனா.

இந்தப் பெருவீரர்களுக்கு எதிராக ஊராள்வோரின் பெரும் படையும், ஈடற்ற அதிகாரமும். பேனாவுக் கெதிராகப் பீரங்கிப் படை. பெரும் போர் விளைந்தது. பேனா ஒடியவுமில்லை, ஓயவுமில்லை. ஆனால் வெடி மருந்து தீர்ந்தது. வெடித்து வெடித்துப் பீரங்கிகளும் ஓய்ந்தன. மன்னனின் பெரும் படை மக்களின் படையாக மாறிற்று.

இப்பேரறிஞர்களின் எழுத்துக்கள் ஒலிவடிவெடுத்து நாடக மேடைகளைக் கைப்பற்றின. நூற்றுண்டுகளாக மீட்டப்படாமல் மக்கள் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த விடுதலை வீணைகள் மீட்டப்பட்டன. விடுதலைப்பண் நாடெல்லாம் இசைத்தது. அந்த இசை, அரண்மனை வாசிகளுக்குச் சாவோலையாய் அமைந்தது.

மன்னனுக்கெதிராக மக்கள் நடத்திய போருக்கும், போரின் முடிவு மக்களுக்கு வெற்றியாக அமையவும் மேற்கண்ட பெரியார்களின் எழுத்துக்கள் காரணமாய் விளங்கின. மக்களாட்சி மலர்வதைக் காணுமலே இவர்களனைவரும் மறைந்துவிட்டனரெனினும், மக்களாட்சி மலரக் காரணமாயிருந்த இவர்களையும், இவர்கள் மனிதகுலத்துக்கு விட்டுச் சென்றிருக்கும் கருத்துக் கருவூலங்களையும் உலகம் என்றும் மறவாது.

புரட்சியின் வெற்றிக்கு மக்கள் நலன் ஒன்றையே கருதிச் சிந்தித்து உழைத்த உத்தமர்கள் காரணமாய் அமைந்தது போலவே, அபாரத் திறமையோடு திட்டமிட்டு மன்னராட்சியை மேலும் வல்லமையுள்ளதாக்க முயன்ற வல்லவர்களான சில பொல்லாதவர்களும் துணை புரிந்திருக்கின்றனர்.

பதினுன்காம் லூயி! மக்கள் புரட்சிக்கு வித்தூன்றிய பொல்லாதவர்கள் சிலரில் ஒருவன். உலகக் கொடுங்கோலர் பட்டியலில் சிறப்பிடம் பெற்றேன். தனது எண்ணத்திற்கு மாருக ஒரு எண்ணம் உருவாவதைச் சிறிதும் சகியாதவன். கடும் அடக்கு முறைகளால், தனது ஆட்சியில் ஏற்படும் முணுமுணுப்புகளை நசுக்குபவன். கொடுமைக்காரன், ஆனல் ஆற்றல் மிக்கோன். புரட்சிக்கும் இந்தப் பொல்லாதவனுக்குமா உறவு என்ற ஐயம் பிறப்பது இயல்பு. ஆனல், கொடுமைதான் எந்தப் புரட்சிக்கும் வளர்ப்புத்தாய் என்பதை வரலாறு அடிக்கடிச் சுட்டிக் காட்டுகிறது.

பதினுன்காம் லூயி சிறியவனாய் இருந்த போது நல்லறிஞர் கூட்ட

போர்க்கொடி எந்துவோம்!

— தமிழ்ப்பித்தன் —

தலைவி : அத்தான்நீர் வீரரெனக் கேள்விப் பட்டேன்
ஆர்படையில் வீரராக உழைக்கின் றீரோ?

தலைவன் : சித்திரமே! தமிழ்ப்படையின் வீர னாக
சேர்ந்துவெகு நாளாயிற் றறியா யோநீ?

தலைவி : நாடுநல மாகவுள்ள போதில் அத்தான்
நண்ணுகிறீர் போர்ப்படையை! அதுதான் ஏனே?

தலைவன் : வடநாட்டார் நமையாளும் நிலையொ ழிக்க
வனிதையே படைசென்றேன் தவறே சொல்வாய்?

தலைவி : ஆளுகின்றார் வடநாட்டார் நம்மை என்றீர்
ஆட்சியிலே தவறேது கண்டீர் சொல்வீர்!

தலைவன் : மாளுகின்ற நிலைமைக்கே நம்மை அன்னர்
மகிழ்வாகத் தள்ளுகிறார் உண்மை தானே!

தலைவி : ஏகநாடு என்றுசொலல் தீதோ அத்தான்!
எவ்வகையில் தப்பாகும்? ஒப்பேன் அத்தான்!

தலைவன் : ஏகநாடு என்றுசொலித் தமிழர் தம்மை
ஏமாற்றி வாழ்கின்றார் வடநாட் டார்தான்!

தலைவி : வடநாட்டார் தென்னுட்டார் என்றே பேதம்
வகைவகையாய்ச் சொல்கின்றீர் வேண்டாம் அத்தான்!

தலைவன் : மடமானே! பேதமறி யாம லந்தோ
மறத்தமிழர் துயருற்றார்! அடிமை யானார்!

தலைவி : எத்துறையில் தமிழரிங்கே அடிமைப் பட்டார்!
எனக்கதனை நீர்விளக்க வேண்டு மத்தான்!

தலைவன் : எழிலரசு பொருள்நிலையோ டிந்த நாட்டில்
இந்தியெனும் மொழியாலும் அடிமைப் பட்டார்!

தலைவி : அடிமைநிலை என்றிட்டீர் அதனை இங்கே
அடியோடு ஒழிக்கவொரு வழிதான் சொல்வீர்!

தலைவன் : மடப்பெண்ணே! மனதிருத்திக் கேட்பாய் இந்த
மன்பதையில் 'திராவிடத்தை'ப் பிரித்தே விட்டால்
அடிமைநிலை மிடிமைநிலை அனைத்தும் நீங்கும்!
அறிவுடனே எண்ணிப்பார்! செல்வம் தங்கும்!

தலைவி : ஆம்அத்தான்! உங்கள்உரை மெய்தான் அத்தான்!
அணுவேனும் தவறில்லை அறிந்தேன் அத்தான்!
நம்நாட்டைப் பிரித்திடவோர் படையே செல்லின்
நானுமதில் சேர்ந்திடுவேன்! உழைப்பேன் அத்தான்!

தலைவன் : தீராத்துயர் தீர்த்திடுவோம்! வாராய் மானே!
சேர்ந்துபணி புரிந்திடுவோம்! நாட்டை மீட்போம்!

இருவரும் : திராவிடத்தைத் தனிநாடு ஆக்கல் வேண்டும்!
திராவிடர்நாம் சுதந்தரமாய் வாழ்தல் வேண்டும்!
சீராக வாழ்வதனை நடத்தல் வேண்டும்!
செகத்துள்ளோர் நமைக்கண்டு வியத்தல் வேண்டும்!

...ரும், நல்லாட்சியும், அமைதியும் பிரான்சின் அணிகலன்களாய்த் திகழ்ந்தன. கார்னலி, மாலியர், ரேஸின் ஆகியோர் பிரஞ்சு நாடக மேடையை ஒளிப்பிழம் பாக்கி வைத்திருந்தனர். போஸ்லே, பெனிவான், டெஸ்கார்ட்டே, கேஸண்டி போன்ற அறிஞர்கள், சிந்தனையைத் தூண்டினர். இவ்வளவும் லூயி சிறியவனாய் இருந்த காலத்தில். வயதுக்கு வந்தான்: பட்டம் சூட்டப்பட்டு அரசனானான். வளரும் சிந்தனையை அடக்கினான். புது எண்ணங்கள் ஊற்றெடுக்கும் ஊற்றுக்களைத் தேடித் தேடி அடைத்தான். கடைசியாக லூயி ஒரு தந்திரத்தைக் கையாண்டான். சிந்தனை வளராது தடுக்கச் சிறந்த வழி, புலவர்களையும், அறிஞர்களையும், பட்டமும், பணமும் தந்து 'ஆதரிப்பது' என்ற முடிவுக்கு வந்தான். தொடக்கத்தில் வெற்றியும் கிடைத்தது. மன்னன் துதிபாடுவோராய்ப் புலவர்கள் மாறினர். அரசன் உள்ளத்தைத் திருப்தி செய்ய அன்றாடம் புதுப்புது உவமைகளையும் கற்பனைகளையும் தேடி அலைந்த கவிஞர்களின் நிலை காணப்பரிதாபமாக இருந்தது. மக்கள் எண்ணங்களைப் பிரதி பலிக்க வேண்டிய அறிவுக் கண்ணாடிகள், மன்னனின் ரூபலாவண்யத்தை எடுத்துக்காட்டும் அரண்மனைக் கண்ணாடிகளாக மாறி விட்டனர்.

ஆனால் இந்த நிலை நிரந்தர நிலைமையாகி விடவில்லை. ஆகியிருந்தால் பிரான்சின் கதி அதோகதியாய் ஆகியிருக்கும். பதினான்காம் லூயியின் பிடி தளர்ந்ததும் பன்மடங்கு வேகத்தோடு சிந்தனை பீறிட்டுக்கிளம்பியது. லூயியின் ஆட்சி முறை விளக்கம் ஒன்றே, பிரான்சில் இனி மன்னராட்சியே கூடாது என்னும் கூற்றுக்கு ஆதரவாய் விளங்கியது. மன்னராட்சியில் மக்களுரிமைக்கும், தூயசிந்தனைத்திறத்திற்கும் எத்தகைய ஆபத்துக்கள் நேரிடக் கூடும் என்பதற்கு லூயியின் ஆட்சி எடுத்துக் காட்டாகக் கையாளப்பட்டது. மன்னராட்சிக் காதரவான வாதங்களை லூயியின் ஆட்சி முறை விளக்க மொன்றே தவிடு பொடியாக்கப் போதுமானதாய் விளங்கியது. எனவே தான் புரட்சியின் வெற்றிக்கு இந்தப் பொல்லாதவன் 'உதவிய' பங்கை நாம் மறக்கக் கூடவில்லை.

கார்டினல் ரீஷ்லு ! உலகம் முழுமையும் மன்னர்களிடம் பணியாற்றிய மந்திரிகளனைவரிலும் மதி மிகப் படைத்தவனும், மன்னராட்சி முறை நீடிக்க வேண்டுமென்ற வெறி மிகக் கொண்டவனும் ஆன கார்டினல் ரீஷ்லு பதிமூன்றாம் லூயிக்கு வாய்த்த மந்திரி. இவன் பதிமூன்றாம் லூயியின் மணி முடியை மட்டும் மன்றி, அவனுக்குப் பின் வரும் அவனது பரம்பரையினர் அனைவருடைய மணி முடிகளையும் வல்லமை உள்ளதாக்க அரிய திட்டங்களை மிகச் சாமர்த்தியமாகத் தீட்டி, நடைமுறைக்குக் கொண்டு வந்தான். அந்தத் திட்டங்கள் வெற்றி பெறாமலிருந்திருந்தால், புரட்சி எளிதில் சாத்தியமாகி இருக்குமா, என்பது சந்தேகத்துக்குரியது தான்.

அவன் காலத்தில் பிரான்சில் பல சிற்றரசர்களும், பிரபுக்களும் ஆங்காங்கே கோட்டைகள் கட்டிக் கொண்டும், சொந்தப் படைகள் வைத்துக் கொண்டும், காட்டுராஜாக்களைப் போல் வாழ்ந்திருந்தனர். அவர்களனைவரும் சட்டப்படி பிரஞ்சு மன்னனுக்கு அடங்கியவர்கள். ஆனால் அவ்வப்போது, ஓரிருவர், ஓரிருவிஷயங்களில் அடங்காப் பிடாரிகளாய் மாறிக் கலாம் விளைப்பதுண்டு. ஆனால், பிரான்சின் மீது மாற்றார் படையெடுப்பு ஏதாகினும் நேரிடின் அனைவரும் தமதாற்றல் முழுவதையும் திரட்டி அரசனைக் காக்க விரைவதில் பின்தங்க மாட்டார்கள். இது வழக்கம்.

ரீஷ்லு ஆற்றல் முழுமையும் மன்னன் வசமே இருக்க வேண்டுமென்று விரும்பினான். ஒவ்வொரு பிரபுவையும், சிற்றரசனையும் தனித்தனியே அடக்கி அவனவனது ராணுவத்தைக் கலைக்கச் செய்தான். ஆங்காங்கே கட்டப்பட்டிருந்த கோட்டைகளை இடித்தெறிந்தான். மன்னனைப் பிரான்சின் மகத்தான தனிச்சக்தியாக்குவதில் வெற்றி பெற்றான்.

பிரபுக்களும், சிற்றரசர்களும் தம் தம் படைகளை இடித்து, கோட்டைகளை இடித்து, தங்கள் வட்டாரத்து வாசத்தையும் விட்டு விட்டு மன்னனிடம் வந்து சேர்ந்தார்கள். அரண்மனைத் தூண்களில் ஆளுக்கொன்றைப் பற்றிக் கொண்டு நிற்க ஆரம்பித்தனர். உரத்த குரலில் மன்னனுக்குக் கட்டியங் கூறப்பயிற்சி பெற்றனர். பட்டங்களைப் பரிசாகப் பெற்று மகிழ்ந்தனர். இரும்புக் கவசங்கள் போர்த்திக் கொண்டிருந்த அவர்களது மார்புகளில் பட்டாடைகள் மிளிர்ந்தன. போர்க்கள வீரர்கள் போகக்களத்துப் பட்டுப்பூச்சிகளாயினர். ரீஷ்லு தன் சாதனையை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். சிறு சிறு சக்திகள் அழிந்தன. மன்னன் சக்தியே மகத்தான சக்தியாகியது.

ஆனால் அந்தோ பரிதாபம் ! இந்நிலை தான் பிரான்சில், சிலகாலத்திற்குப் பின் மக்கள் மன்னனுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த போது மன்னனைக் காக்க துணைப்படைகள் வராமல், தனையும், தனது அலங்காரக் கண்மணிகளான பிரபுக்களையும் காக்க வேண்டிய பாரத்தை மன்னன் மீது சுமத்தியது. பாரம் தாங்காமல் மன்னனும், சூழ இருந்தோரும் மாளநேரிட்டதற்கும் இந் நிலை தான் பெருந் துணை புரிந்தது. மன்னராட்சியை மேலும் வல்லமை படைத்ததாக்கத் தீட்டிய திட்டம், வல்லவர்கள் பரம்பரையின் அழிவைத் துரிதமாக்கத் துணை புரிந்தது. எனவேதான் புரட்சியின் வெற்றியைப் பற்றி ஆராயும் போது இந்தப் பொல்லாதவர்களின் வல்லமை கவனத்தை ஈர்ப்பதைக் காணுகிறோம்.

திராவிட நாடு பிரிவினை வாரம்

◉

17-9-55—23-9-55.

◉

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் "திராவிட நாடு பிரிவினை வார" ஊர்வலம் 18-9-55 மாலை 3 மணிக்கு நேப்பியர் பார்க்கிலிருந்து புறப்பட்டு, பல முக்கிய வீதிகளின் வழியாக பெரம்பூர் ஏரிக்கரை மைதானத்தைச் சென்றடையும்.

அன்று மாலை 6 மணிக்கு 6-வது வட்ட தி. மு. கழகத்தின் சார்பில் பெரம்பூர் ஏரிக்கரையில் திராவிட நாடு பிரிவினை வாரப் பொதுக்கூட்டம் நடைபெறும். **அறிஞர் அண்ணா** அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். கூட்டத்தின்போது பெரம்பூர் இரயில்வே தொழிலாளர்கள் சார்பாக மாநில மாநாட்டு நிதியளிக்கப் படும்.

Phone : 114 A. Tele : HERO

இங்கிலீஷ் மருந்துகளும், மற்றும் சகலவிதமான மருந்துகளும்

சேலத்தில் கிடைக்குமிடம்

★

ராஜரத்னு மெடிகல் ஸ்டோர்ஸ்,

மஜீத் பில்டிங்ஸ், கடைவீதி, செவ்வாய்ப்பேட்டை,

சேலம்.

ஸ்ரீ மீனாக்ஷி மில்ஸ் லிமிடெட்

மதுரை & மணப்பாறை.

◉

மூலதனம்

அதிகாரம் பெற்றது	ரூ. 60,00,000
கையொப்பமாகி வசூலானது	ரூ. 48,81,240
மொத்தம் கதிர்கள்	66,988
விசைத் தறிகள்	144

16 நெம்பர் முதல் 40 நெம்பர் வரை கைத்தறிகளுக்கும், இயந்திரத் தறிகளுக்கும், பனியன் பாக்டரிகளுக்கும் தேவையான நூல்களும், மற்றும் மல், லாங்கிளாத்துகளும் தயாரிக்கப்படுகின்றன.

◉

நிருவாக கருத்தர்கள் :

தியாகராஜ செட்டி & கோ.,

திருப்பரங்குன்றம் ரோடு, மதுரை.

தந்தி விலாசம் : 'கருமுத்து' டெலிபோன் நெ. 1,347

தபால்பெட்டி நெ. 1

ரஸ்புடீன்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

ரஸ்புடீன் : எல்லாம் தன்னால் முடியும் என்று எண்ணி இறுமாப்படைகிறான் எதுங்கெட்ட மனிதன். ஆண் குழந்தை இல்லையே என்று அல்லல் அடைந்திருந்த உனக்கு இந்த ஆண் குழந்தையைத் தரமுடிந்ததா அரசனால் ?

அலெக்சாண்டர் . உங்கள் அருள்தான் வேண்டியதிருந்தது சுவாமி.

ரஸ் : உங்கள் அருள் ! உண்மை ! நான் யார்? தெரிகிறதா உனக்கு ?

அலெக் : மகான் !

ரஸ் : பிழை ! தோகையே உன் காதைத் தூய்மைப்படுத்திக் கொண்டு கேள், தேவரகசியம் ! நான்தான் ஏசு. ஏசுதான் நான்.

அலெக் : அப்போதே நினைத்தேன் சுவாமி, அரண்மனையில் இதுவரைக்கும் தாங்கள் செய்த அற்புதங்கள் யாருக்கு வரும் !

(அதே நேரத்தில் சீமாட்டி ஒருத்தி வருகிறாள்.)

அலெக் : சுவாமி இவள்தான் அந்தப் பிரபுவின் தங்கை !

ரஸ் : நம் ஆசைப் பணிவிடைக்கு கூசமாட்டாளே ! கூசமாட்டாள் என்றே தோன்றுகிறது.

அலெக் . கருத்துள்ளவள்.

ரஸ் : கருத்திருந்து பயனில்லை. கறந்தபால் கறந்த படி கைப்படாமல் உறைத்த கட்டித்தயிர் தானே ?

அலெக் : நான் சொல்லவேண்டுமா, தங்கள் ஞானதிருஷ்டி இருக்கையில் ?

ரஸ் : [ஏற இறங்கப் பார்க்கிறான்] வண்டு மொய்க்காத புதுப்பூ ! ஆம் ! மற்றவர் குடிபுகாத மணிமண்டபம் ! மொண்டு உண்ணும் அமுதக் கவிதையின்......முதற் பதிப்பு. அவள் முத்துச்சிரிப்பை மறைத்தாலும், முகத்தில் தெரிகின்றதே அவள் மோகத்தின் கொதிப்பு ! என்னடி கண்ணே நாணிக்கொண்டு நிற்கிறாய் மாணிக்கப் பதுமைபோல ! வா ! கொஞ்சிக் குலாவ என்னிடம் வஞ்சியர் கூட்டம் வருவதற்குள் வா ! உம். வா !

(அவளை இழுத்துத் தன் அண்டையில் இருத்தி அவள் தோளில் சாய்கிறான்)

மாப்பிள்ளை வலிய இழுத்து அணைப்பதில் ஓர் அலாதி இன்பம் மங்கையர்க்கு !

(அதே நேரத்தில் அரசன் வருகிறான். அவனைக் கண்டு சீமாட்டி விலக முயலுகிறாள்.)

அரசன் : நான் வந்துவிட்டேன் என்று நாணப்படுகின்றாய் ! அவர்களை மனிதன் என்று எண்ணுகின்றாய் ?

ரஸ் : தோகைமயிலே உன்னை நான் தொட்டணைப்பதுபோல் தோன்றும் உனக்கு! அது தொட்டணைப்பதல்ல ! ஓர் ஆடவனிடம் நீ சிற்றின்பம் அனுபவிப்பது போலிருக்கும், உனக்கு ! அது சிற்றின்பம் அல்ல !

சிஷ்யன் : (வந்து) சுவாமி பல ஆண்டுகளாகத் தங்களுக்குப் பஞ்சணைத்தொண்டு செய்து வரும் பாவையர்கள்.

(வருகிறார்கள் என்பதைக் கையால் காட்டுகிறான்.)

ரஸ் : புதிய பழமாய் இருந்தால் புசிக்கலாம்.

சிஷ்யன் : இல்லாவிட்டால் ?

ரஸ் : இனத்தவர் எதாகிலும் கொடுத்து அனுப்பு !

சிஷ்யன் : அந்தப் பச்சை ரவிக்கைப்பாவை அண்ணனுக்குப் படைத்தலைவன் அலுவல் வேணுமாம்.

ரஸ் : இனத்தானுக் கில்லாமல் ? ஆகட்டும்.

சிஷ்யன் : அந்த ஊதாப் பாவாடையின் மகனுக்கு உதவிப் படைத்தலைவன் வேலை வேண்டுமாம்.

ரஸ் : ஓ ! அவரவர்கட்கு வேண்டியதைக் கொடு.

சிஷ்யன் : இப்படி மொத்தம் நூறு பேருக்குத் தலைமையான அலுவல்கள் தேவை.

ரஸ் : பழைய உத்தியோகஸ்தர்களை எல்லாம் நீக்கி நம் இனத்தாரையே போடு. காலா காலத்தில் புரட்சிக்காரர்கள் கொட்டத்தைக் குழிதோண்டிப் புதைக்க இது நல்ல ஏற்பாடு.

சிஷ்யன் : கட்டளை பிறப்பிக்க வேண்டியவர் சக்ரவர்த்தி (கையால் காட்டி) அல்லவா ?

அரசன் : இல்லை. இல்லை. இல்லை ! சாமி சொன்னபடியே.

சிஷ்யன் . குடும்பச் செலவுக்கு ?

ரஸ் : கொடு லட்சம் வீதம். அதோ இருக்கிறது கூடத்தில் அரசாங்கப் பொக்கிஷம். சிஷ்யன் .(அரசனை நோக்குகின்றான்) எங்கே பார்க்கின்றாய்? சிஷ்யா என்னுடையது ரஷ்யா. அள்ளி வீசு பொதுப் பணத்தை.

சிஷ்யன் : சரி ! தனியாக ஒருசேதி. (அரசன் போய்விடுகிறான். அரசி போகிறாள். சீமாட்டி விலக எண்ணுகிறாள்.)

ரஸ் : போகின்றாயா ? (சீமாட்டியை நோக்கி) இன்று நடந்தது, இனி நாம் நடத்த இருக்கும் இன்ப நாடகங்களின் ஒத்திகை. வந்து போய்க்கொண்டிரு. வளர்ந்து கொண்டே போகும் சுவை. போய் வா !

(போகிறாள்)

2

கூச்சல் கேட்கிறது.

ரஸ் : புரட்சிப்புயல் அடிக்குதோ ?

சிஷ்யன் : ஆமாம்; இனியும் நீங்க சும்மா இருக்கக்கூடாதுங்க.

ரஸ் : நீதான் பார்த்தாயே சும்மா வாடா இருந்தேன் இப்போது?

சிஷ்யன் : நிலைமை மோசமாகிவிடும். நேற்றுப் புரட்சித்தலைவர் பேசிய பேச்சுத் தெரியுமா உங்களுக்கு ?

ரஸ் : மடப்பயலே, எனக்கா தெரியாது ! நான்தான் புரட்சித் தலைவன் என்று வைத்துக் கொள் !

-அவன் சொல்லுகிறான்:- தோழர்களே ! சார் சக்ரவர்த்தியையும் தையல் அலெக்சாண்ட்ராவையும் ஆட்டிப் படைக்கிறான் ரஸ்புடீன் !

அந்தத் துஷ்டன் ரஸ்புடீனால் கற்பழிக்கப்படாத ஒரு பட்டுப் பாவாடைகூட இல்லை. சாக்காட்டின் ஓட்டில் தவிக்கிறார்கள் ரஷ்ய மக்கள் ! அவர்களை வாட்டி வதைக்கும் வறுமையானது கரையேற முடியாத கடலாய் விட்டது.

பட்டினி என்று பதறும் பாட்டாளி மக்களின் கூப்பாடெல்லாம் பாமண்டலம் நோக்கிய உரை மண்டலமாகி ஒழிந்தது. மக்களின் ஏக்கமோ அவர்களை மரணத் தூக்கத்துக்கு அழைக்கிறது. ஐயோ உம் என்றால் சிறைவாசமா? ஏன் என்றால் வனவாசமா? மக்களின் இந்த இரங்கத்தக்க ஒவ்வோர் அசைவுக்கும் ரஸ்புடீன் காரணம்.

மக்களின் மருண்ட பார்வையாலும் இருண்ட கண்களிலும், வற்றிய கன்னங்களிலும் அந்த ரஸ்புடீனின் வஞ்சச்சூழ்ச்சிகளே காட்சியளிக்கின்றன.

மக்களை மத ஓடத்தில் சேர்த்தான். பலிபீடத்தில் சாய்த்தான். வாழ முடியாமல் இங்கு வந்தேறிய ஒரு கோழை, கொடிய குள்ளநரி மதாச்சாரியானான். வருணாச்சாரம் பரப்பினான். அது மட்டுமா ?

மக்கள் ஒட்டிய வயிற்றைக் காட்டி, விட்ட மூச்சைக் கேட்டால சுட்டுத்தள்ள வேண்டும் என்பதற்காக முற்கூட்டியே தன் இனத்தாரை எல்லாம் பொறுப்புள்ள உத்தியோகத்தில் புகுத்தினான் வர்ணாச்ரமாச்சாரி ரஸ்புடீன் ! —என்று கூறுகிறான்.

சிஷ்யன் : பகைவன் பத்தும் சொல்லுவான். அது கிடக்கட்டும் நம்ப கட்சிப் பிரபுக்களே நம்மை எதுக்கிறாங்க தெரியுமா உங்களுக்கு ?

ரஸ் : மடப்பயலே எனக்கா தெரியாது? நான்தான் பிரபுக்கள் தலைவன் என்று வைத்துக் கொள், (அவன் சொல்லுவான்)

புரட்சிக்காரர் கை வலுத்து விட்டது. புடலங்காயாகிவிட்டது அரசர் கை. அவர்கள் மிஞ்சுகிறார்கள், இவன் அஞ்சுகிறான். இந்த நிலை ஏன் ? யாரால் ?

பழம் படை வீரர்களும் கிழங்கு போன்ற இளைஞர்களும், பாடுபடும் பாட்டாளி உலகமும், ஏடு எழுதும் எழுத்தாளர் உலகமும் போன உரிமையை மீட்கத் துடிக்கும் புலிக் கூட்டமும் புரட்சிக்காரர் பக்கம்.

ஏன் இந்த நிலை ? யாரால் ? அந்த முடிச்சிமாறி ரஸ்புடீன் அல்லவா காரணம் ? இனியும் படித்த மாதிரி நடந்துகொள்ள வேண்டாமா நாம்? இன்றைக்கே-இப்போதே நாம் செய்யவேண்டியது ஒன்று. அதுதான் ரஸ்புடீனை ஒழிப்பது.

ரஸ் : (சொந்த மேக்கப்பில்) இது தான் அவர்கள் பேச்சின் சாரம்.

சிஷ் : தெரிந்துதானே இருக்கிறது உங்களுக்கும் ! செத்துப்போகத் தான் நினைக்கிறீங்களா அவுங்க கையாலே ?

ரஸ் : அதிலும் நானுடா செத்துப் போக நினைக்கிறவன் ? ஏசு, ஏசு, என்று இழுக்கும் எந்திழைமார் எத்தனை பேர்கள் ? மகான் மகான் என்று என்னை மடக்கும் மாடப்புறாக்கள் எத்தனை பேர்கள் ! குருவே குருவே என்று என்னிடம் கொஞ்சும் அஞ்சுகங்கள் எத்தனை பேர்கள் ! இந்த பஜனைக் கோஷ்டியைப் பிரிந்து பல்லக்கில் போக நினைப்பேனுடா! (இதற்குள் ஓர் ஆள் அஞ்சல் கொண்டுவந்து கொடுக்க அதை வாங்கிக்கொள்கிறான் ரஸ்புடீன்).

ரஸ் : அதைப்படி.

சிஷ் : ஏன்...தங்களுக்கு...

ரஸ் : உம் ! (கைவிரிப்பு.)

சிஷ் : நீங்க படிக்காதது வியப்புங்க,

ரஸ் : நீ படித்திருப்பதுதான் வியப்பு, சார் ஆட்சியில்-படிடா

சிஷ் : அடிகளுக்கு போவ் வணக்கம்.

ரஸ் : அடடா அந்தப் போவ் பிரபுவா அப்புறம் !

சிஸ் : இருந்து என் சீமாட்டியுடன் விருந்து சாப்பிட்டுப் போக வேண்டும்.

ரஸ் : (மகிழ்ச்சி) போகவேண்டும். வண்டியைப் போடச் சொல்லு,

சிஷ் : அவன் அயோக்யன் சாமி.

ரஸ் : நான் ?

சிஷ் : அவன் வீட்டுக்குப் போகவே கூடாது,

ரஸ் : அந்தப் புனுப்படம் கிடைக்குமா போகாவிட்டால் ?

சிஷ் : அவன் கொலைகாரன்,

ரஸ் : நான் ?

சிஷ் : வஞ்சகன் வீட்டில் கால் வைக்கலாமா ?

(16-ம் பக்கம்)

இந்த நாடகம்

ஒரே நடிகர் பல பாத்திரந் தாங்கி நடிப்பது போல, ஒரு படத்திற்காக கவிஞரவர்களால் எழுதப்பட்டது.

கிளைக் கழகங்கட்கு வேண்டுகோள்

1956-ம் ஆண்டு திராவிடர் நாட்குறிப்பில், தி மு. க. கிளைகளின் விவரங்களை வழக்கம் போல் வெளியிட இருப்பதால், ஒவ்வொரு கிளைக் கழகத்தின் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் இவர்களின் பெயர்களையும், எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது என்ற விவரத்தையும் 5-10-55 க்குள் கிடைக்கும்படி, 'போர்வாள்' 147, பவழக்காரத் தெரு, சென்னை-1 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு செயலாளர்கள் வேண்டிக்கொள்ளப் பெறுகிறார்கள்.

பொறுப்பாளர்,
போர்வாள்.

வாழ்வது எப்படியோ?

ஈ. வே. கி. சம்பத்

(8)

இந்தியத் துணைக்கண்டத்தில் தொழில் நிலையில் எடுத்துக்கொள்ளினும் சரி, தொழில்கள் பலவற்றின் அடிப்படைத் தேவை என்ற நிலையில் காணினும் சரி, முக்கியத்துவம் வகிப்பது நிலக்கரி (Coal) ஆகும்.

நிலக்கரிச் சுரங்கங்கள் பெரிதும் வடநாட்டிலேயே உள்ளன. வடநாட்டில் உள்ளவைகளே இதுவரையிலும் கண்டுபிடிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, தோண்டப்பட்டு வருகின்றன. ஐதராபாத்திலும் ஒரு சில சுரங்கங்கள் உள்ளன. எனினும், தொழில் அதிபர்கள் வடவர்களாகவே உள்ளனர். தென்னாற்காடு மாவட்டத்தில் வளம்மிக்க பழுப்பு நிலக்கரி ஏராளமாக உண்டெனினும் உபயோகப்படுத்த டில்லிப் பீடம் அனுமதியோ ஆதரவோ இன்னும் அளிக்கவில்லை. தென்னாற்காட்டு நிலக்கரி இன்னும் அழுகுரல் அளவிலேயே உள்ளது. தொழில் அளவுக்கு வர இந்நாட்டு அரசியலில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட வேண்டுமோ ?

சுரங்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளின் பட்டியலைக் காணும்போது நிலைமை எவ்வளவு பயங்கரம் என்பது விளங்கும்.

கம்பெனிகள்.	மூலதனம்.	சேமிப்பு நிதி.
1 அமால்கமேட்டட் கோல்பீல்ட்ஸ் (கல்கத்தா)	25,50,000	17,50,000
2 அஸோஸியேட்டட்கரன்புரா காலியரீஸ் (கல்கத்தா)	10,50,000	...
3 அஸோஸியேட்டட் லெபிக்டி காலியரீஸ் (கல்கத்தா)	8,00,000	...
4 பாக்டிகி குஜூமாகாலியரீஸ் (கல்கத்தா)	20,00,000	...
5 பெங்கால் பாட்டுடீகோல் கோ (கல்கத்தா)	4,49,350	70,000
6 பெங்கால் கோல் கம்பெனி (கல்கத்தா)	1,20,00,000	75,00,000
7 பால்கோராகோல் Co. (கல்கத்தா)	15,97,000	4,73,358
8 பெங்கால் நாக்பூர் கோல் Co. (கல்கத்தா)	3,37,500	5,21,767
9 பாரத் காலியரீஸ் (டால்மியா நகர், பீஹார்)	69,99,998	1,00,000
10 புலசன் பர்ராரி கோல் Co. (கல்கத்தா)	7,15 000	8,01,000
11 பூராங்கியா கோல் co. (கல்கத்தா)	10,00,000	...
12 பொக்காரே அண்டு ராம்குர் (கல்கத்தா)	16 00,000	12,55,774
13 பொர்ரீயா கோல் co. (கல்கத்தா)	11,50,000	20,20,000
14 புர்ராக்கூர் கோல் co. (கல்கத்தா)	1,18.42,280	1,37,08,398
15 செண்ட்ரல் இண்டியா கோல் பீல்ட்ஸ் (கல்கத்தா)	49,97,000	...
16 செண்ட்ரல் குர்குகண்ட் கோல் co. (கல்கத்தா)	8,00,000	1,30,330
17 சுரிலியா கோல் co (கல்கத்தா)	6,00,000	1 41,587
18 தேமோ மெயின காலியரீஸ் (கல்கத்தா)	16,00 000	13,50,000
19 ஈஸ்ட்டர்ன் ஸிண்டிகேட் (கல்கத்தா)	7,50,000	13 596
20 ஈஸ்ட் இண்டியன் கோல் co. (கல்கத்தா)	£ 2,40,000 சுமார் ரூ. 31,20,000	£ 266,906 சுமார் ரூ. 23,70,778
21 ஈக்விடபில் கோல் co. (கல்கத்தா)	33,63,760	74,36,570
22 கூஸிக் அண்டு முஸ்லியா காலியரீஸ் (கல்கத்தா)	5,00,000	2,62,486
23 கவ்ரங்டீ காலியரீஸ் (கல்கத்தா)	5,00 000	...
24 குஸ்டார் காஜோ ராகோல்மைன்ஸ் (கல்கத்தா)	6,50,000	30,342
25 ஹிங்கிர் ராம்பூர் கோல் co. (பம்பாய்)	20,00,000	80,000
26 ஹுர்ரீல்த்தீ கோல் co. (கல்கத்தா)	8,00,000	4,60,000
27 ஜெயந்தீ செண்ட்ரல் காலியரீஸ் (கல்கத்தா)	2,42,500	...
28 ஜாரியா அண்டு ராணிகுஞ்ச் காலியரீஸ் கல்கத்தா)	4,06,050	1,41,288
29 ஜோக்டா கோல் co. (கல்கத்தா)	27,00,000	...
30 கலாபஹாரி கோல் co. கல்கத்தா)	3,50,000	3,50,000
31 கரன்புரா காலியரீஸ் (கல்கத்தா)	29,81,000	...
32 கரன்புரா டெவலப்மெண்ட் co. (கல்கத்தா)	20,00,000	27,48,910
33 காஸ்ட்டா அண்டு பீஹார் காலியரீஸ் (கல்கத்தா)	2,40,000	...
34 காட்ராஸ் ஜெர்ரீயா கோல் co (கல்கத்தா)	5,00,000	12,00,000
35 காஸ்கஜோரா கோல் co. (கல்கத்தா)	3,31,400	...
36 காஸ்ஷம்போரி கோல் co. (கல்கத்தா)	9,00,000	...
37 கவ்ர்டி கோல் co (கல்கத்தா)	11,00,240	...
38 லக்கூர்க்கா கோல் co (கல்கத்தா)	9 00,000	6,75.000
39 மஹாபீர் காலியரீஸ் (கல்கத்தா)	5,00,000	3.25,000
40 முண்டல்பூர் கோல் co (கல்கத்தா)	5,65,750	85,000
41 நஸிரா கோல் co (கல்கத்தா)	7,48,240	1,50,000
42 நியூபான்ஸ் டியோபூர் கோல் co (கல்கத்தா)	7,00,000	2,26,758
43 நியூ பீர்பூம் கோல் co. (கல்கத்தா)	19,76,230	13,72.000
44 நியூ சுராலியா கோல் கோ (கல்கத்தா)	11,10,000	...
45 நியூ ஹண்டோடி. கோல் கோ. (கல்கத்தா)	6,00,000	...
46 நியூ ஜோய்ராம்பூர் கோ. (கல்கத்தா)	6,50,000	90,368
47 நியூ மான் பூம் கோல் கோ. (கல்கத்தா)	6,00,000	3,30,000
48 நார்த்டாமூடா கோல் கோ. (கல்கத்தா)	2,50,000	1,75,500
49 நார்த்தேமோ கோல் கோ.	3,70,000	38,315
50 நார்த்வெஸ்ட் கோல் கோ. (கல்கத்தா)	2,72,500	2,60,000
51 ஒண்டால் கோல் கோ. (கல்கத்தா)	9,50,000	10,50,000
52 ஓரியண்டல் கோல் கோ. (கல்கத்தா)	10,00,000	1,10,000
53 பாராசீயா காலியரீஸ் (கல்கத்தா)	16,34,000	70,000
54 பென்ச்வேலீ கோல் கோ. (கல்கத்தா)	15,75,000	8,75,000
55 பூரீ சிட்டால்பூர் கோல் கன்ஸர்ன் (கல்கத்தா)	2,50,000	5,000
56 ராணீகுங்கீ கோல் அஸோசியேஷன் (கல்கத்தா)	23,99,500	6,82,105
57 ராவரன்வாரா காலியரீஸ் (கல்கத்தா)	9,45,500	...
58 ரேவா கோல்பீல்ட்ஸ் (கல்கத்தா)	13,50,000	7,38,385
59 சம்ளா காலியரீஸ் (கல்கத்தா)	20,00,000	7,38,027
60 ஷீர்சோலி கோல் கோ. (கல்கத்தா)	1,25,000	1,55,000
61 ஷீப்போரி கோல் கோ. (கல்கத்தா)	6,80,000	6,77,288
62 ஸேண்ட்ரா கோல் கோ. (கல்கத்தா)	8,00,000	8,73.042
63 ஷ்ரீ மஹாகாளி கோல்மைன்ஸ் (கல்கத்தா)	5,50,000	...
64 சிங்கரான் கோல்ஸிண்டிகேட் (கல்கத்தா)	1,37,500	6,235
65 சிங்கரேணி காலியரீஸ் (ஹைதராபாத்)	63,21,450	21.75,387
66 ஸடித்கரான்புரா கோல் கோ. (கல்கத்தா)	17 50,000	10.92,200
67 ஸ்டாண்டர்டு கோல் கோ கல்கத்தா	8,00,000	13,89.545
68 டாய்ஸேரி கோல்பீல்ட்ஸ் (கல்கத்தா)	10,00 000	12,950
69 டெண்டுரியா காஸ்காலியரீஸ் (கல்கத்தா)	10,01,000	...
70 யூனியன் கோல் கோ. (கல்கத்தா)	3.50,000	2,30,000
71 யுனைட்டட் காலியரீஸ் (கல்கத்தா)	40 27,975	4,67,269
72 வெஸ்ட்டர்ன் பெங்கால கோல் பீல்ட்ஸ் (கல்கத்தா)	49,98,000	3,00,000
73 வெஸ்ட் கூஸிக் கோல் கோ. (கல்கத்தா)	8,00,000	...
74 வெஸ்ட் ஜமூரியா கோல் கோ. (கல்கத்தா)	7,00,000	3,65,000
75 வெஸ்ட் லெயிக்டி கோல் கோ. (கல்கத்தா)	6,00,000	...

மேலே கண்ட 75 கம்பெனிகளும் வடநாட்டவர்களின் கரங்களில் உள்ளன. இந்தியத் துணைக்கண்டத்தின் மிகப் பெரிய தொழில்களில் ஒன்றான நிலக்கரிச் சுரங்கத் தொழில் முழுவதும் வடவர்களின் வசம் எனில் நமது நிலை என்ன ?

வெண்பாப் போட்டி 17.

ஈற்றடி :

மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்

முடிவு தேதி 8-10-55.

முகவரி :—
வெண்பாப் போட்டி,
தென்றல்,
சென்னை-6.



இரவு வேளை; மற்றவர்கள் உழைப்பை உறிஞ்சி வாழும் உயர்ந்த பெருமக்கள் எல்லோரும் உண்ட மயக்கத்தால் உறங்கி விட்டனர்; உழவர்களும் உழைப்பாளிகளும் தம் மனைவிமார் தம்மை உண்ண அழைக்கும்வரை வெளியில் வீசும் காற்றை உண்ணலாம் என்று அங்கங்கே உரை யாடிக் கொண்டிருந்தனர். வானத்தில் தாழ்ந்த நிலவு வெள்ளிக் கதிர்களை விரித்துக் கொண்டிருந்தது, உயர்ந்த இடத்தில் அதன் உன்னத நிலையைக் கண்டு பொருமை கொண்டோ, அல்லது தாம் உள்ள உலகத்தில் நிலவுக்கு என்ன வேலை என்ற எண்ணத்தாலோ ஊர் நாய்கள் சில அதை நோக்கி ஊளை யிட்டன, கொட்டில்களிலிருந்து அவ்வப்போது எழுந்த கழுத்து மணியின் இனிய ஒலி மாடுகள் இன்னும் உறங்க வில்லை என்பதை உணர்த்தியது. அவ் வொலிக்குச் சுருதி கூட்டுவது போல, ஊரின் ஒரு கோடியிலிருந்த பெரிய ஆலமரத்திலிருந்து, பறவைகளின் பாட்டு, காற்றில் மிதந்து வந்தது. பல் வேறு போர்களால் நலிவுற்றிருந்தும், இப்படி அமைதிக்கு இருப்பிடமாக விளங்கியது சத்திய மங்கலம்!

ஆனல் சத்திய மங்கலத்தில் நிலவிய அமைதி, உண்மை அமைதி தானு? இல்லை; அடுத்து வீச இருந்த புயலுக்கு அது அறிகுறி, புரட்சிக்கு முன்னுல் வறுமை கட்டியங் கூறுவது போல; இகழ்ச்சிக்கு முன்னுல் இறுமாப்பு உலவுவது போல; சத்திய மங்கலத்தை நோக்கி மைசூர்ப்படைகள்விரைந்து கொண்டிருந்தன; தளவாய் அம்பையா அழகான வெள்ளைக் குதிரையின் மேல் அமர்ந்து அப்படையை நடத்திக் கொண்டு வந்தான். ஆயிரக் கணக்கான வீரர்கள், நூற்றுக் கணக்கான குதிரைகள்! அமைதியை நிலை நாட்ட அல்ல, அதன் கற்பைக் கெடுக்க! குதிரைகளின் குளம்பொலியும், வீரர்களின் கொக்கரிப்பும், வாள்களின் மோதலும் அமைதியின் சவப் பெட்டிக்கு ஆணிகள் அறைந்தன.

சத்திய மங்கலம் மைசூர்க்கும் மதுரைக்கும் இடையில் உள்ளது. அக் காலத்தில் மதுரையை நாயக்கர்கள் ஆண்டு வந்தனர். நாயக்கர் பரம்பரையில் புகழ் பெற்ற மன்னன் திருமலை நாயக்கன். அவன் ஒரு முறை பீசப்பூர் முகம்மதியத் தளபதியோடு சேர்ந்து கொண்டு மைசூரைப் போரில் வென்றுன்; ஊர்களை எல்லாம் நாச மாக்கினுன்; மக்களை எல்லாம் அடிமை யாக்கினுன்; வளமான இடம் எல்லாம் பஞ்சத்தால் கருகி அழியக் காரணமானுன்! மைசூர் மன்னன் கந்தீரவ நரச ராசா தோல்வி யுற்றுலும் பழி வாங்குவதற்குக் காலம் பார்த்திருந்தான்; பீசப்பூர் தளபதி மைசூரை விட்டு நீங்கியதும், ஏற்ற சமயம் கிட்டியது. மதுரைத் திருமலை நாயக்கன் அப்போது நோய்கண்டு படுக்கையில் கிடந்தான்; ஆகவே அவனுல் போருக்கு வர முடியாது. அவனுடைய பாளையக் காரரில் எவனுவது தான் போரை நடத்த வேண்டும்; பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணினுன் மைசூர் மன்னன். மதுரைக்குத் தெரியாமல் படை திரட்டினுன்; தளவாய் அம்பையாவின் தலைமையில் மதுரையை நோக்கி ஏவினுன்.

நள்ளிரவு; உழைப் பாளிகளும் உறங்கி விட்டனர்; உழைப் பாளிகள் வீட்டுச் சோற்றில் பங்கு பெற்று உண்கின்ற வண்ணுரும் உறங்கி விட்டனர். அம்பையாவின் படை அந்த நடு இரவிலேயே ஊரை முற்றுகை யிட்டு விட்டது; படையின் இரைச்சலைக் கேட்டு மக்கள் விழித்தனர்; தூங்கிய வீரர்கள் துள்ளி எழுந்தனர். பெண்கள் எல்லோரும் கதவைச் சாத்தித் தாளிட்டனர். சத்திய மங்கலப் படை வீரர்கள் வாளை உருவிக் கொண்டு வெளியில் வந்தனர்; ஊரைச் சுற்றிலும் மைசூர்ப் படைகளைக் கண்டு கலங்கினர்; வழியறியாமல் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதில் முனைந்தனர்! எதிர்ப்பார் அற்ற மைசூர்ப்படை எக்களிப்புக் கொண்டது. ஆனல் அம்பையாவின் உள்ளத்தில் எரிந்த ஆத்திரம் மட்டும் அணையவே இல்லை; மதுரைப் படைகள் அவன் நாட்டு ஊர்களில் நடத்திய நாச வேலைகள் அவன் மனத்திரையிலிருந்து அகலவில்லை. பழிக்குப் பழி! ஆணையிட்டு விட்டான் அழிவு வேலைக்கு!

வீடுகள் எல்லாம் ஒளிக் கோபுரங்கள் ஆயின; அறுவடையை எதிர் நோக்கிய வயல்கள் எல்லாம் எரிந்து சாம்பலாயின; குளக் கரைகள் உடைபட்டன; மக்கள் கதவுகளைத் திறந்து கொண்டு வெளியில் வந்தனர்; வந்தவர்களை வலை போட்டுப் பிடித்து விட்டனர் மைசூர் வீரர்; ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கிழவர், இளைஞர் எல்லோரும் சிறைப் பட்டனர்; பொழுது விடியுமுன் மைசூர் மன்னன் கொடி சத்தியமங்கலத்தில் பறந்தது!

மறு நாள் மாலை; சிறைக் கைதிகளுக்குக் கிணற்று நீரும் கிட்டவில்லை; குழந்தைகள் எல்லாம் பசியாலும், தாகத்தாலும் கதறின; கடல் நீரைக் கொண்டே தாகத்தைத் தணிக்க முடியாது; பெண்களின் கண்ணீரைக் கொண்டு தானு தணிக்க முடியும்? கிழவர்கள் எல்லோரும் களைப்பால் சுருண்டு கிடந்தனர். சத்திய மங்கல மக்கள் இப்படித் துயரத்தோடு போராடிக் கொண்டிருக்கையில், மைசூர் வீரர்களுக்கு ஒரே மகிழ்ச்சி; பழிக்குப் பழிவாங்கி விட்ட மகிழ்ச்சி! மைசூரார் பட்ட இன்னல்களை மதுரை மக்களும் நுகரட்டுக் என்று முழங்கினர்.

பொழுது சாய்ந்தது; கைதிகள் கூடாரங்களில் தீப் பந்தங்கள் ஒளி வீசின; பகலில் காவல் இருந்த மைசூர் வீரர்கள், இரவுக் காவலுக்கு ஆட்கள் வந்தவுடன் போய் விட்டனர். கைதிகள் தப்பி ஓடுவதற்கு ஏதாவது தந்திரம் செய்கிறார்களா என்று இரவுக் காவலுக்கு வந்த வீரர்கள் சுற்றிப் பார்த்தனர். தீப் பந்தத்தின் ஒளி மங்கலாக நிலவிய ஓர் இடத்தில் ஒரு கைதியின் உருவத்தைக் கண்டதும், மைசூர் வீரன் ஒருவன் தயங்கி நின்றுன்; சிறிது நேரம் அதையே உற்று நோக்கினுன்; கைதியின் உருவம் மெதுவாக அசைந்தது; முகத்தில் ஒளி பாய்ந்தது. அடுத்த கணம் "கங்கம்மா!" என்று கத்தினுன் மைசூர் வீரன்! கங்கம்மா திடுக்கிட்டாள்; திரும்பினுள்; தலைப் பாகையை நீக்கி விட்டு நின்ற வீரனை அடையாளம் கண்டு கொண்டாள்; "அத்தான!" என்று தரையில் சாய்ந்தாள்.

கருப்பையாத் தேவன் சுற்றிலும் பார்த்தான்; அவனேடு காவலுக்கு

வந்த வீரர்கள் சிறிது தொலைவில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். கூடாரத்தில் இருந்தவர்கள் மயக்கத்திலும் தூக்கத்திலும் ஆழ்ந்திருந்தனர்; ஓரிரு இடங்களிலிருந்தே அழுகையும், முனகலும் வெளிவந்தன.

"கங்கா நீ எப்படி இங்கே சிக்கிக் கிட்டே?" என்றுன் கருப்பையாத் தேவன்.

"அத்தான்! அதை எல்லாம் அப்புறம் சொல்கிறேன்; முதலில் என் பசிக்கு எதையாவது கொண்டு வாங்க. காலையிலிருந்து நான் ஒன்றுமே சாப்பிட வில்லை! இந்தப் பாவிகள் குடிக்கத் தண்ணீர் கூடக் கொடுக்க வில்லை!" என்றுன் கங்கம்மா.

"அப்படியா செய்தாங்க? இந்த எதிரிப்படைக் காரனுங்களே அப்படித் தான்! பெண்டு பிள்ளைன்னு இரக்கமே காட்ட மாட்டானுங்க. சரி நான் போய் உன் வயித்துக்கு ஏதாவது திருடிக் கொண்டு வருகிறேன். அது வரை உசிரே விடாம வச்சிரு." என்றுன் கருப்பையாத் தேவன்.

"அத்தான்! சாக்கிரதையாப் போய் வாங்க; எனக்காக நீங்க வம்பிலே மாட்டிக்கப் போறீங்க". என்றுன் கங்கம்மாள்.

> தமிழ் நாட்டுப் போர் முறைகள் நேர்மைக்குப் பேர் போனவை. என்றுலும் பிற்பட்ட காலத்தில் ஒரு சில கீழ்த்தரமான முறைகளும் கையாளப் பட்டுள்ளன. அவற்றில் ஒன்று "மூக்கறு போர்" என்பது. கி. பி. 17 ஆம் நூற்றுண்டில் நடந்த அத்தகைய போரைப் பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்டது இக்கதை.

கருப்பையாத் தேவன் மற்ற காவலாளிகளிடம் வந்தான். "அண்ணே! அதிகத் தாகமா இருக்கு. போய்க் கொஞ்சம் தண்ணீர் குடிச்சுட்டு வருகிறேன்; அதுவரை சாக்கிரதையா பாத்துக்கிறீங்களா?" என்றுன். அவர்கள் உடன் பட்டனர்; உடனே வீரர்களின் சமையல் கூடாரத்தை நோக்கிக் கருப்பையாத் தேவன் புறப்பட்டான்.

★

கருப்பையாத் தேவனுடைய அக்காள் மகள் கங்கம்மா அவள் தாய்க்கு ஆண் குழந்தை இல்லை; ஆகவே அவள் தன் தம்பி கருப்பையாத் தேவனை மதுரையில் தன் வீட்டிலேயே வளர்த்து வந்தாள். வயது வந்தவுடன் தன் தம்பிக்கும் மகள் கங்காவுக்கும் முடிச்சுப் போட்டு விட வேண்டும் என்பது அவள் எண்ணம். கருப்பையாத் தேவனும் கங்கம்மாவும் இணை பிரியாமலேயே வளர்ந்தார்கள்; இருவருக்கும் ஒருவரை ஒருவர் மணந்து கொண்டு வாழ வேண்டும் என்று ஆசை தான். ஆனல் அவர்கள் எண்ணம் ஈடேற வில்லை. கங்கம்மாவின் அன்னை திடீரென்று மாரடைப்பால் இறந்து போனுள்; பிறகு கங்கம்மாவின் தந்தைக்கும், கருப்பையாவின் தந்தைக்கும் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாகக் கருப்பையா இனிமேல் தன் வீட்டில் இருக்கக் கூடாது என்று கங்கம்மாவின் தந்தை கூறிவிட்டான். அதோடு கருப்பையா கங்கம்மாவைப் பற்றிக் கனவு கூடக் காணக் கூடாது என்றும் சொல்லி விட்டான். கருப்பைய்யாவுக்கு இது பேரிடியாகி விட்டது. கங்கம்மாவும் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தாள்; வீட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன்னுல், கருப்பையா கங்கம்மா விடம் வந்தான். இருவர் நாக்கும் சிறிது நேரம் வரை

ம.ரா.பூபதி M.A.

அசைய வில்லை. கண்கள் தாம் பேசின; இல்லை - உள்ளக்குமுறல் களைக் கண்ணீராக உகுத்தன.

"போய் வருகிறேன், கங்கா,"

"அத்தான்! என்னை மறந்து விடுவீர்களா?"

"அதெப்படி முடியும், கங்கா? ஆனால் உன் அப்பாவின் கோபம் மாறுகிறவரைக்கும் நான் இங்கே இருக்கக் கூடாது. இருந்தால் உனக்கும் தொல்லை; எனக்கும் ஆபத்து. ஏற்கெனவே, நீ என்னோடு பேசுவதைப் பார்த்தால், இரண்டு பேரையும் வெட்டிப் போட்டு விடுவேன் என்று சொல்லி இருக்கிறாராம்!"

"ஆமாம். என் அப்பா கொஞ்சம் கோவக்காரர் தான். கோவம் தணிஞ்சதும் அவரே நம்ம கலியாணத்தை நடத்தி வைப்பார். இப்போ நீங்க எங்கே போகப்போறீங்க? ஊங்க அப்பா விடமா?"

"இல்லை கங்கா. உன்னைக் கையிலே பிடிக்காமல் வீட்டுப் படியில் கால் எடுத்து வைக்கப்போவதில்லை. இப்படி வடக்கே போய், கொஞ்ச காலத்துக்கு ஏதாவது வேலை செய்து சாப்பிடப் போகிறேன்; போய் வருகிறேன் கங்கா. நான் வரும் வரைக்கும் பத்திரமாக இரு. முடிஞ்சா அப்பா கோவத்தை அடக்கப் பாரு."

கங்கம்மாவின் கண்ணீர் தன் கரத்தை நனைக்க, விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட கருப்பையாத் தேவன் ஈரோட்டை அடைந்தான். அந்தச் சமயம் ஈரோட்டில் மைசூர் மன்னனுடைய ஆட்கள் படைக்கு ஆள் சேர்த்துக் கொண்டிருந்தனர். தனக்குத் தகுந்த வேலை கிடைத்ததென்று கருப்பையாத் தேவன் மைசூர்ப் படையில் சேர்ந்து வாள் போர் செய்யவும், பாணம் முதலியன சுழற்றவும் கற்றுக் கொண்டான். பிறகு தான், மதுரையில் ஆண்ட திருமலை நாயக்கன் பீசப்பூர் தளபதியுடன் படை எடுத்துச் சென்று மைசூர் மன்னனை வென்று, அந் நாட்டின் பல பகுதிகளையும் அழித்த செயல் நிகழ்ந்தது.

★

கைதிகள் கூடாரங்களுக்கும், வீரர்களின் சமையல் கூடாரத்துக்கும் சுமார் ஒரு கல்தொலைவு இருந்தது. சமையல் கூடாரத்தை நோக்கிக் கருப்பையாத் தேவன் புறப்பட்டவுடனே, மைசூர் படைத் தலைவன் தளவாய் அம்பையன், கைதிகளின் கூடாரங்களைப் பார்வையிடுவதற்காக வந்தான். கங்கம்மா இருந்த கூடாரத்துக்கு அருகில் அவன் வந்த போது, வேறு கூடாரத்தில் காவல் இருந்த ஒரு வீரன் ஓடி வந்து, அவனை வணங்கினான்.

"என்ன சேதி? ஏன் இவ்வளவு அவசரமாக ஓடி வருகிறாய்?" என்றான் தளவாய் அம்பையன்.

"கைதி ஒருவன் காவல் காத்துக் கொண்டிருந்த நம்ம வீரன் ஒருவன் மூக்கை அரிந்து விட்டானுங்க!" என்றான் வந்தவன்.

"என்ன மூக்கை அரிந்து விட்டானா? அவ்வளவு திமிரா இந்தச் சத்திய மங்கலச் சக்கைகளுக்கு? ஏன் மூக்கை அரிந்தான்? அவன் மூக்கை அரிகிறவரைக்கும் இந்த மடையன் என்ன செய்தான்? தலையைச் சீவியிருக்க வேண்டாமா?" என்றான் தளபதி.

தளபதியின் சினப் பெருக்கத்தைக் கண்டு செய்தி சொல்ல வந்த வீரன் நடுங்கிவிட்டான். என்றாலும், மதுரைக் கைதிகள் இதற்குச் செம்மையாகப் பழிவாங்கப் படுவார்கள் என்ற மகிழ்ச்சியும் அவன் உள்ளத்தில் பொங்கியது.

"இல்லிங்க தளபதி ஐயா; அந்தக் கைதி குடிக்கத் தண்ணீர் கேட்டான்; கொடுக்கக் கூடாதுன்னு நீங்கள் உத்தரவு போட்டிருக்கப் போ, மீறி நாங்க எப்படீங்க கொடுக்க முடியும்? அதுக்காகத்தான் நம்ம ஆளு ஏமாந்திருந்த சமயம் பார்த்து, அந்தக் கைதி மூக்குக்கு நேரா கத்தியை நீட்டிட்டான்!" என்றான் வந்த ஆள்.

உடனே தன் முன் அந்தக் கைதியைக் கொண்டு வந்து நிறுத்துமாறு ஆணை யிட்டான் தளபதி. நடந்த தென்னவோ இதுதான். கைதிக் கூடாரத்தில் கருப்ப முற்றிருந்த ஒருத்தி குடிக்கத் தண்ணீர் கேட்டாள்; காவலிருந்தவன் தண்ணீர் கொடுக்காததோடு, "அவள் மூக்கைப் பாரு, சப்பை மூக்கு. இந்த லட்சணத்துக்கு நான்போய்த் தண்ணீர் கொண்டு வர வேண்டுமாமே" என்று இன்னொரு காவலாளியிடம் அவளைப் பற்றி நையாண்டி செய்தான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த இன்னொரு கைதிக்குக் கோபம் பொங்கியது. "சத்திய மங்கலத்துப் பெண் உனக்கு அவ்வளவு இளக்காரமாய் விட்டாளா? என்று கருவினான்; காவலாளி தனக்கு அருகில் வந்தவுடன் திடீரென்று தன்னிடமிருந்த சிறு கத்தியால் அவன் மூக்கை அரிந்து எறிந்து, "இப்பொழுது சப்பை மூக்கு யாருக்கு?" என்று கேட்டான்.

இந்தத் தன்மானக் கைதியைக் காவலாளி தளபதி முன் கொண்டு போய் நிறுத்தினான்; தளபதியோ உடனே வாளை உருவி அங்கேயே அவன் தலையை வெட்டி வீழ்த்தினான். என்றாலும், தளவாயின் கோபம் தணிய வில்லை; ஒருவன் ஆத்திரத்தால் செய்த செயலுக்கு மதுரைக் கைதிகள் அவ்வளவு பேரையும் பழி வாங்கக் கருதினான். மதுரைக்கைதிகள் அனைவரும் மைசூர் வீரன் ஒருவனுக்கு நிகர்!-இது தான் அந்தத் தளவாயின் எண்ணம்! ஆகவே, உடனே ஓர் ஆணை பிறப்பித்தான், தன் வீரருக்கு. கூடாரங்களில் உள்ள கைதிகள் எல்லோருடைய மூக்குகளையும் அரிந்தெறியுங்கள் என்று கூறி விட்டுப் போய் விட்டான்.

கைதிகள் கூடாரம் எங்கும் ஒரே கூக்குரல்! சமையல் கூடாரத்துக்குச் சென்ற கருப்பையாத் தேவன் கூக்குரலைக் கேட்டு ஓடி வந்தான்; தளவாயின் தான்றோன்றி ஆணை அவனுக்குத் தெரியாது. கங்கம்மாவின் கூடாரத்தை நோக்கிப் பாய்ந்தான். கங்கம்மா கைகளால் முகத்தை மூடிக் கொண்டு, "அய்யோ, அய்யோ! என்ற அலறலுடன் தரையில் புரண்டு கொண்டிருந்தாள். மற்ற பெண்கள், கிழவர்கள் இளங்குழந்தைகள் எல்லோருமே வேதனை தாளாமல் தரையில் துடித்துக் கொண்டிருந்தனர். கருப்பையாத் தேவன் கங்கம்மா விடம் ஓடினான். "கங்கா! கங்கா! உனக்கு என்ன?" என்று கேட்டுக் கொண்டே முகத்தைத் திருப்பினான்.

முகம் செந்தேன் பொழியும் செந்தாமரை போல் இருந்தது. செந்தேனா அது? இரத்தத் தேன்! கருப்பையாவின் இதயத்தை யாரோ எடுத்துப் பிழிவது போல் இருந்தது; மார்புக் கூடு வெடித்து அது வெளியே பாய்ந்து வந்து விட்டால் கூட நிம்மதியாகச் சாகலாம் என்று தோன்றியது அவனுக்கு. நேர்மையான முறையில் போரிட்டு எதிரிகளைக் கொல்வதை அவன் வெறுக்கவில்லை; எதிரிகளின் ஊர்களை எரித்துச் சாம்பலாக்குவதைக் கூட அவன் வெறுக்க வில்லை. ஆனால், துணையில்லாத கைதிகளின் மூக்கை அரிவதை அவனால் வெறுக்காமல் இருக்க முடிய வில்லை. அதுவும் பெண்களின் மூக்கையும், இளங் குழந்தைகளின் மூக்கையும் அரிவதென்றால்! கருப்பையாவின் உள்ளத்தில் வெஞ்சினம் மூண்டது. என்றாலும் காத்திருப்போம், காலம் வரும் என்று சினத்தை அடக்கிக் கொண்டான். கங்கம்மாவின் தலையைத் தன் மடிமேல் வைத்துக் கொண்டு அவள் முகத்தைத் துணியால் துடைத்தான்; "கங்கா நீ ஒன்றுக்கும் கவலைப் பட வேண்டாம்; உன் மூக்குப் போனால் போகிறது. ஆனால் நீ மட்டும் என்றும் எனக்குரிய கங்காதான்! நீ என்னோடேயே வந்து விடு. இந்தப் போர் முடியட்டும்; உன்னை நான் என் பெண்சாதி யாக்கிக் கொள்கிறேன்!" என்று ஆறுதல் மொழி கூறினான்.

மறக் குடியில் பிறந்த கங்கம்மாவுக்கு இந்த ஆறுதல் மொழி இனிக்க வில்லை; அவள் இதயம் வஞ்சினத்தால் வளர்ந்து கொண்டிருந்தது; அவள் வெளியிட்ட ஒவ்வொரு மூச்சிலும் பழிக்குப் பழி என்ற வெப்பம் வீசியது.

"இல்லேங்க இப்போது என்னால் உங்களோடு வர முடியாது. மதுரைப் பெண்களை யெல்லாம் மாடுகள் என்று எண்ணிவிட்டார்கள் இந்த மைசூர் வீரர்கள்; எளிதாக மூக்கணாங்கயிறு மாட்டி விடலாம் என்று நினைத்து இப்படிச் செய்து விட்டார்கள். என்னை, இந்தப் பேடிகள் மூக்கை அரிந்து அவமானப் படுத்தி விட்டுப் போய் விட முடியாது. நான் ஒருத்தியே நாலு மைசூர் வீரர்களின் மூக்குகளைத் துண்டிக்க வேண்டும். அப்போது தான் என் மனம் எரிச்சல் அடங்கும்; மதுரைக்கும் மறக்குடிக்கும் ஏற்பட்ட அவமானமும் தீரும். இப்படிச் செய்யா விட்டால், என் பெயர் கங்கம்மா இல்லை; இதைச் செய்து முடிக்கும் வரை எனக்குக் கலியாணமும் தேவை இல்லை!" என்று வஞ்சினம் கூறினாள் கங்கம்மா. கங்கம்மாவின் முகத்தை நோக்கினான் கருப்பையாத்தேவன். இரத்தக் கறை படிந்த அதில் வெற்றித் திருவின் வீர நடனத்தைக் கண்டான். அவள் செய்த சபதத்தை எண்ணி வியந்தான். மறக் குலத்தின் விளக்கு அவள் என்றது அவன் மனம்.

"எனக்கு இச்சமயம் ஒரே ஓர் உதவி செய்வீர்களா?" என்று முனகினாள் கங்கம்மா.

"என்ன கங்கம்மா? என்ன செய்ய வேண்டும்? நீ செய்த சபதத்தைப் போல் நான் செய்ய வேண்டுமா? அல்லது இப்போதே நாலு மைசூர் வீரர்களின் மூக்குகள் வேண்டுமா? உடனே சொல்," என்றான் கருப்பையாத் தேவன்.

"என்னங்க நீங்க இந்தக் கங்கம்மாவைக் கையால் ஆகாதவள் என்று நினைத்து விட்டீர்களா? கையாலாகாத சோணங்கிப் பெண் தான், காரியத்தை முடிக்க ஆண்பிள்ளையின் துணையை நாடுவாள். நான் செய்த சபதத்தை நான்தான் நிறைவேற்றுவேன். ஆனால் என் சபதத்தை முடிப்பதற்கு முதல் படியாக நான் இங்கிருந்து இப்போது வெளியேற வேண்டும். அதற்குத் தான் உங்கள் துணை வேண்டும்," என்றாள் கங்கம்மாள்.

கருப்பையாத் தேவன் சிறிது நேரம் மவுனமானான்; பிறகு, "இங்கேயே தயாராக இரு கங்கா, நான் சரியான சமயம் பார்த்து வருகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான். புறப்பட்டவன் மைசூர் வீரர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று சுற்றிப் பார்த்தான். சிலர் இன்னும் கைதிகளின் மூக்குகளைத் துண்டிப்பதிலேயே ஈடுபட்டிருந்தனர். சிலர் அவர்களுக்கு ஊக்க மூட்டுவதில் முனைந்திருந்தனர். இன்னும் சிலர் ஏழையின் துயரைக்கண்டு இன்பங்கொள்ளும் செல்வரைப் போல், கைதிகளின் துடிப்பைக் கண்டு மகிழ்ச்சியில் மூழ்கினர். அவர்களை எல்லாம் அப்படியே கொன்று வாளால் வெட்டி வீழ்த்தி விடலாமா என்று எண்ணினான் கருப்பையாத் தேவன். அப்படிச் செய்ய முனைந்தால், அவனும் அங்கேயே உயிர் இழக்க நேரிடும். அப்புறம் அவன் கங்காவின் கதி! அவள் எப்படி வெளியேற முடியும்? அறுந்த மூக்குக்கு அவள் எப்படிப் பழி வாங்க முடியும்? உடைந்து கொண்டிருந்த உள்ளத்தைக் கையால் பிடித்துக் கொண்டு, கங்காவிடம் திரும்பி வந்தான்.

"உடனே புறப்படு கங்கா. தப்புவதற்கு இதுதான் ஏற்ற சமயம்" என்றான்.

கங்கா எழுந்தாள்; இருவரும் தீப்பந்தங்களின் ஒளி அதிகமாகப் படியாத இடங்களின் வழியாக நடந்து, கூடாரங்களை விட்டு, வெளியேறினர். "அப்பாடா!" என்று வேதனையோடு பெரு மூச்சு விட்டாள் கங்கம்மாள்.

"இதற்குள் அசந்து விடாதே, கங்கா. இங்கே இருந்தாலும் இடைஞ்சல்தான். இன்னும் இரண்டு கல் தொலைவு போய் விட்டால், பிறகு தப்பித்து விடலாம்" என்றான் கருப்பையாத் தேவன்.

வழியில் ஒரு கிணறு எதிர்ப்பட்டது. கிணற்றங்கரையில் ஓர் ஒட்டைச்

(13-ம் பக்கம்)

'கன்னித் தமிழ்' மாத வெளியீட்டிற்கு உதவி ஆசிரியர்கள் தேவை. ஆண்டுச் சந்தா ரூ. 3 செலுத்தியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

கன்னித் தமிழ்,
களஞ்சேரி (தஞ்சை).

பிரிவினை வாரம்

மலர் 2 | 17—9—55 | இதழ் 14 & 15



ஆறுண்டுகள்! அறுத்திடுவோம் தொடர்பை என, 'செங்கோட்டை முதலாளி'களின் மூலபலம் முறியும் வகையில் முழக்கமிட்டு இயக்கம் உருப்பெற்று எழுபத்திரண்டு திங்கள்கள் ஓடிவிட்டன.

திரும்பிப்பார்க்கிறேம்—' குன்றத்தூர்' களில், 'கல்லக்குடி'களில் தோட்டா ஒலியால் கலைந்த மேகங்கள் இன்னும் சேரவில்லை. நம்மிடம் தோற்றுப்போன சட்டப்பிரிவுகள் சட்டப் புத்தகத்தினுள் ஒளிந்து கிடக்கின்றன.

உலக நாடுகளின் புரட்சி இயக்கங்களெல்லாம் ஒளிவிட்டு மறைகின்றன. அவைகளின் ஆயுட்காலத்தையும், அவை வளர்ந்த கதையையும் சாகாத சரித்திரங்கள் நமக்குச் சொல்லுகின்றன.

திரும்பிப்பார்க்கிறேம்—துடுக்குத்தனமாகப் பேசி, நம்மைத் தீர்த்துக் கட்டிட நினைத்த மிடுக்குடையோரின் பாதச் சுவடுகள் தெரிகின்றன. விட்டேனு பார் என வீரமொழி பேசி, இறுதியிலே வீழ்ந்து பட்டு 'விபீஷணாழ்வார்'களானேர் பளபளப்போடு பவனி வரும் ' பொய் வாழ்வு ' நமது கண்களுக்குத் தெரிகிறது.

மீண்டும் திரும்பிப்பார்க்கிறேம்—வஞ்சக புரியின் நிரந்தரத்தலைவன்-வாழ்வின் கடைசி அத்தியாயத்திலேயும் 'இனநல'னுக்குப் பாடுபாட்ட இதிகாசக்காவலன் ஆச்சாரியாரின், தோல் விபடர்ந்த கிழட்டுமுகம் நமக்குப் புலப்படுகிறது. சிரிக்கிறுர்; சிரிப்பொலி நம் காதில் வந்து மோதுகிறது. அவரால் ஏவி விடப்பட்ட 'லத்தி'கள் மனக்கண்முன் தோன்றித் தோன்றி மறைகின்றன; அதிலே படிந்திருந்த தோழர்களின் ரத்தக் கறையும் ரத்தினம்போல் மின்னிட்டு ஒளிர்கின்றன.

இத்தனை எதிர்ப்புகளுக்கிடையே நாம் வளர்ந்திருக்கிறேம். தி. மு. கழகம் வலுப்பெற்றிருக்கிறது. கழகமிலா ஊரில்லை என்றளவுக்கு நாம் வளர்ந்திருக்கிறேம். அந்தப் பெருமிதத்தோடு இன்று ஏழாவது ஆண்டின் தலைவாசலில் காலெடுத்து வைத்திருக்கிறேம். எதிரிகள் முகாமிலே, அலட்சியம், அச்சமாக மாறிவிட்டது; ஏளனம் திகிலுருக்கொண்டிருக்கிறது நாம் வளர்ந்திருக்கிறேம், கண்ணியத்தின் காவலர்களாய், கட்டுப்பாட்டின் செல்வங்களாய் அந்தப் பெருமையோடு-இந்த இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஜனநாயகத்தைக் கற்றுக்கொடுத்தோம் என்ற கீர்த்தியோடு தி. மு. கழகத்தின் ஏழாவது ஆண்டு விழாவினை சிறப்போடு கொண்டாடுகிறேம். இந்த ஆண்டில் 'தென்றல், அதன் பங்கினை, திராவிடர் இல்லங்களுக்கு நல்ல எழுத்தோவியங்களாகத் தந்திருக்கிறது. தென்றல் - திராவிட நாடு பிரிவினை நாள் மலர் நல்லதோர் கொள்கை விளக்க மலராக உங்களிடையே மிதந்து வருகிறது. பெரியாரின் கட்டுரை, புரட்சிக்கவிஞரின் புதிய படைப்பாம் 'ரஸ்புடீன்' போகப் பூனைகளுக்கும், போலி வேடதாரிகளுக்கும் அபாய அறிவிப்பு. சொற்செல்வர் சம்பத் அவர்களின் 'சரித்திரக் காட்சி'கள் நம் இலட்சிய வெற்றிக்கு அசைக்க முடியாத சாட்சிகள். திரு. பூபதி அவர்களின் வரலாறு தழுவிய வீரக் கதை படிப்போரை, பக்கத்தில் வாளிருக்கிறதா என்று தடவிப்பார்க்கத் தூண்டுகிறது. மற்றும் தோழர்கள் சந்தனத்தேவன் இளம்பரிதி,ம. ரா இளங்கோவன், தமிழ்ப்பித்தன் ஆகியோரும் தென்றலுக்கேற்ற சுவையோடு கருத்துக் கருவூலங்களைத் தீட்டியிருக்கிறுர்கள். பூரிப்போடும், விரைவிலே புது வாழ்வு காண்போம் என்ற நம்பிக்கையோடும் மலரைத் தருகிறேம். நுகருங்கள். இன்பம் பெறுங்கள், இயன்றுல் எழுதுங்கள்.

1-10-55!

தென்றல் புதுப்பொலிவு பெறுகிறது

◎

வேலங்குடித் திருவிழா!
வேலங்குடித் திருவிழா!!

◎

கண்ணதாசன்
எழுதும் புதிய தொடர்கதை
ஆரம்பமாகிறது

◎

கல்லக்குடி மாகாவியம்-களத்திலே

தகராறு

◎

இலக்கியத்தில் காதல்

◎

இலக்கியப் போட்டி முடிவுகள்

◎

தென்றல்

2-127, மவுண்ட்ரோடு, சென்னை-6.

தந்தி: ராஜா :: போன் நிர் 268

சங்ககால மங்கை!

சங்ககால மங்கையர் கச்சணிந்து கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டி அதைப் பின்னிவிட்டிருப்பர். காதில் குழை : கழுத்தில் ஆரம் : கைகளில் ஆம்பல் தண்டால் செய்த தொடி : விரல்களில் மோதிரம் : இடையில் மேகலை : காலில் நூபுரம், சதங்கை முதலிய அணிகள் பூண்டிருந்தனராம்.

உயர்ந்த நகைகள்—நாணயம்—நம்பிக்கை
இதற்குச் சிறந்த இடம்

◎ சுவர்ணமாளிகை ◎

வைரம், தங்கம், வெள்ளி நகைகள்
நாணயத்தோடும் நம்பிக்கையோடும்
கிடைக்கும் இடம்

பி. எ. ராஜு செட்டியார்
& பிரதர்

சுவர்ணமாளிகை :: கோயமுத்தூர்.

அம் : கம்பரே! மகாகவிஞரே! ஏனிந்தக் கோலம்? எங்கிருந்து வருகிறீர்?.........பேசமாட்டீர்! உமது இதயம் துடித்துக் கொண்டிருக்கிறது இப்போது! உதை விழுந்ததா, விழ வில்லையா!.........ஏன் விழிக்கிறீர்? கேடு கெட்டவனின் கதை எழுதும் கைகள், அந்தக் கீழ்த்தரங்களைப் புகழ்ந்து பாடும் வாய், பறவர்குல மங்கையையும் சீதையாகவே எண்ணி வந்ததா? மங்கை சீதையானாள், கம்பரே! கணவன் இராமனாகவில்லை! கண்டேன் அதை! உம்மைக் கொன்றிருந்தால்கூட உடனே ஓடியிருப்பேன்...உமக்காக அழ அல்ல! தலை முழுக! உம்மை அவன் மென்று தின்றிருந்தாலும், ஊரார்க்குச் சொல்லியிருப்பேன் என் தந்தைக்கு நியாயமான முடிவுதான் கிடைத்ததென்று! கம்பரே! உமது காவியம் போகும் வேகத்திலே வள்ளுவனை மறந்திருப்பீர்! அதனால்தான் கள்ளத்தனத்தில் ஆழ்ந்தீர்! உள்ளத்தைச் சுத்தப்படுத்திக்கொண்டு ஒரு முறை அதை எண்ணிப்பாரும்!

> பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
> அறம்பொருள் கண்டார்கண் இல்,
>
> அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
> நின்றாரின் பேதையார் இல்.
>
> விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
> தீமை புரிந்துஒழுகு வார்.
>
> எனைத்துணையர் ஆயினும் என்னும் தினைத்துணையும்
> தேரான் பிறனில் புகல்.
>
> எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
> விளியாது நிற்கும் பழி.
>
> பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
> இகவாவாம் இல்லிறப்பான் கண்.
>
> அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
> பெண்மை நயவா தவன்.
>
> பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
> அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.
>
> நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
> பிறற்குரியாள் தோள்தோயா தார்.
>
> அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
> பெண்மை நயவாமை நன்று.

புரிந்ததா? மீண்டும் ஒருமுறை சொல்லட்டுமா?

கம் : அம்பிகாபதி! முறைகெட்டுப் பேசாதே! இதையெல்லாம் நீ கண்டும் காணாதவன்போல் நடந்துகொள்ளவேண்டும்! அதுதான் தந்தைக்கும் மகனுக்கும் இதுபோன்ற நேரங்களில் இருக்கவேண்டிய முறை!

அம் : காணாதவன்போல் இருந்திருப்பேன், உமது காதல் ஒரு கன்னியோடு நடந்திருக்குமானால்! மாற்றான் மனைவி! ஆவி ஒன்றித் தாவி அணைந்து ஆளனோடு வாழ்ந்த ஒருத்தி! அவளை, வேளை பார்த்து, விளக்கம் கொடுத்து, காவியம் படித்து, கட்டியணைத்து, பாவி எனும் சொல்லுக்குப் பக்குவமான உவமை யானீரே! இதைக் கண்ட பின்னும் காணாதவன்போல் நடிப்பதெப்படி? கம்பரே! சீதையை மறந்துவிட்டு, தென்னகத்தை நினையும்! 'நெஞ்சில் பிறன் நினைந்தான்: அஞ்சுகம் நெறியழிந்தாள்' என்பதே தென்னவன் பண்பு! உமக்கெப்படித் தெரியும்? தென்னவன் மகளை வஞ்ச மகளாக்க எண்ணும் உமக்கெப்படித் தெரியும்!

கம் : அம்பிகாபதி! பேசாமற் போ!

அம் : வேறென்ன சொல்லமுடியும் உம்மால்? விளக்கம் கொடுப்பீரா? செய்தது சரிதான் என்று வாதிடத் துணிவீரா? 'குற்றவாளி கோழையாவான்' என்று அடிக்கடி சொல்வீரே, அது இப்போது உம்மைப் படம் பிடிக்கிறது!

கம் : சீ! மடையா!

அம் : விருத்தம் பாடுகிறீரா?

கம் : பேசாமற் போ! இல்லையேல், மரியாதை கெட்டுவிடும்!

அம் : எங்கே இருக்கிறது மரியாதை, இனிமேல் கெட! அடுத்தவன் வாசலில் அடி எடுத்து வைத்தபோதே அழிந்து விட்டது அது!

[கம்பன் அலட்சியமாக, வேகமாகச் செல்லுதல்.]

அம் : (அவனைப் பார்த்தபடியே) போம்! போம்! இந்த வேகத்திலேயே போய், அன்னை சீதையின் ஆலிங்கனக் கலா நிகழ்ச்சியை, அற்புதமாய்ப் படம் பிடித்து வையும்!

[போகிறான்.]

—காட்சி முடிவு—

களம் 26

காட்சி : 26

இடம் : குலோத்துங்கன் அரண்மனை.

நேரம் : காலை.

[அமராவதியும் தோழி மல்லிகையும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

அம : அடீ! நான் ஒன்று எழுதிவைத்திருக்கிறேன், பார்க்கிறாயா?

மல் : என்ன அது? காவியமா, ஓவியமா!

அம : இது ஒரு புது 'இயம்'!

மல் : எங்கே, படி! கேட்கலாம்!

அம : பாதியிலிருந்து படிக்கட்டுமா?

மல் : ஏன்? சுவையான பகுதி அங்கேதான் தொடருகிறதோ? படி, படி!

அம : (படித்தல்)

> ....
> முத்துமல் லிகை மொய்த்தபஞ் சணையில்
> சித்திரக் குழல் சேயிழை அருகில்
> வித்தகன் தமிழ் வீர(ன்)நற் கவிஞன்
> மத்தகம் எனச் சாய்ந்திது வரைவன் :
> ''நெஞ்சிலோ டிய நேரிழை வனப்பே!
> நிலவெனப் படு முகமலர்ச் சிரிப்பே!
> கொஞ்சுமாந் தளிர்க் குழைவுறும் கலையே!
> குறைபடாத நின் மேனிவெண் சிலையே
> ....

மல் : (இடைமறித்து) இப்படியெல்லாம் அவன் அவளை வர்ணிக்கிறான்! அப்பாடி!!

அம : ஏன்!

மல் : அனுபவப்பட்டவர்களுக்கே, இந்தக் கற்பனை வர ஆறு நாளாகும்! உனக்கெப்படி இவ்வளவு சுலபமாக.........!

அம : போடி, போ! அனுபவம் மட்டுமல்ல கற்பனைக்குக் கரு! உணர்ச்சியும் கூடத்தான்!

மல் : அப்படியென்றால், உன் உணர்ச்சி...! இப்போது...காதல் உலகில்....

அம : (நாணத்தோடு தலைகுனிந்து) உஸ்! சும்மா இரு!

மல் : புரிந்துவிட்டது! ஏறக்குறைய முழுக் காவியமுமே நான் படித்ததுபோல் ஆகிவிட்டது!

கண்ணதாசன்

அம : நேற்று நடந்ததை நீ கவனித்தாயா டீ !

மல் : நான் கவனிக்கவில்லை ! ஊரிலே பேசிக்கொண்டார்கள் !

அம : ஐயய்யோ ! அது, ஊருக்கு எப்படித் தெரிந்தது ?

மல் : எது ?

அம : அம்பிகாபதியின்பால் எனக்குக் காதல் பிறந்தது...?

மல் : பிறந்ததா ! முழுக்கவும் புரிந்தது ! அதை உன் வாயால் கேட்பதற்காகத்தான், அந்தப் பொய் சொன்னேன் ! கொஞ்சம் சாடையாக நேற்றுக் கவனித்தேன். அவ்வளவு தான் !

அம : உண்மையில் இது ஊருக்குத் தெரியாதே !

மல் : யாருக்குத் தெரியும், என்னைத் தவிர !

அம : உன் ஒருத்திக்குத் தெரிந்தால் போதாதா ?

மல் : ஆமாம் ! என்ன இப்படித் திடீரென்று...?

அம : அதுதானடி, எனக்கும் புரியவில்லை !

மல் : சரி; இனி ஒரு புதிய செய்தி சொல்லுகிறேன், கேள் ! நேற்று அந்தியிலே, நான் ஆற்றங்கரைப் பக்கம் போயிருந் தேன். அப்போது அம்பிகாபதி அங்கு பாடிக்கொண் டிருந்தார்.

அம : என்னைப் பற்றியா ?

மல் : இல்லை, அவரது காதலியைப் பற்றி !

அம : யாரது !

மல் : அந்தப் பாட்டிலிருந்து அவள் பார்வையைத் தெரிந்து கொள்ள முடிந்ததே தவிர பெயரைத் தெரிந்துகொள்ள முடியவில்லை !

அம : எங்கே, சீக்கிரம் அந்தப் பாட்டைச் சொல்லடி !

மல் . **உருகி உடல்கருகி உள்ளீரல் பற்றி**
எரிவ தவியா தென்செய்கேன்—வரியரவ
நஞ்சிலே தோய்த்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

அம : நெஞ்சிலே நெருப்பிட்டாள் ! நேற்றந்தி நேரத்திலே அம்பிகாபதி பாடினார் ! அது வேறு யாருமல்லடி ! நானே தான் !

மல் : கெக்கே ! ஆசையைப் பாரு !...அமராவதி, என்னவோ நாம் வேடிக்கையாகப் பேசுகிறோம் ! ஆனால், நீ மன்னன் மகள் ! மாளிகைச் செல்வி ! அவர் பாடிப் பிழைக்கும் பாவலர் ! நாடாளும் உன் தந்தை இதை அறிந்தால்...... ஐயோ ! நினைக்கவே எனக்குப் பயமாக இருக்கிறது !

அம : இல்லையடி இல்லை ! என் தந்தையை நான் நன்றாக அறிவேன் ! பிடித்தவனைத் தேடிக்கொண்டாள் பெண் என்றதும், அடுத்த காரியத்தைத்தான் அவர் கவனிப்பார் !

மல் : என்னவோ ! எதிலும் எச்சரிக்கையாய் இரு. ஆபத்தைத் தேடிக்கொள்ளாதே !

[இப்போது யாரோ நடந்துவரும் ஒலிகேட்டு இருவரும் திரும்பிப் பார்க்க, அம்பிகாபதி வருதல்; மல்லிகா எழுந்து மெல்ல நழுவல்.]

அம : வாருங்கள் ! வணக்கம் !

அம் : சற்றுத் தாமதமாகிவிட்டது !

அம ; காரணம் !

அம் : கண்மூடவில்லை, இரவெல்லாம் !

அம : (நாணத்தால் முகம் சிவக்க) எனக்கும் அப்படித்தான் !

அம் : நான் எதிர்பார்க்கவேயில்லை !

அம : நானும்கூட த்தான் !

அம் : உனக்கும் தெரியுமா ?

அம : தெரியும் உங்களுக்குத் தெரிந்த அளவு !

அம் : மனிதர்களுக்கு ஆசை வரலாம் ! ஆனால்,...

அம : அதற்கும் ஓர் எல்லையுண்டு, அறிவேன் !

அம் : எல்லையைத் தாண்டிப் போகும்போது,......

அம : தொல்லைகளை அனுபவிக்கத்தான் நேரும் !

அம் : அதிலும் அவள் மாற்றான் மனைவி !...

அம : நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் !

அம் : என் தந்தை...இல்லை, இல்லை...கம்பர், நேற்று இரவு ஓர் கைக்களவன் வீட்டிற்குள் புகுந்து, அவன் மனைவியோடு சரசமாடினார். கைக்களவனால் துரத்தப்பட்டார். நான் கண்டேன் அந்தக் காட்சியை ! இரவெல்லாம் வீடு செல்ல வில்லை : ஆற்றங்கரையிலேயே தூங்கினேன் !

அம ; ஐயோ ! அவதிப்பட்டிருப்பீர்களே ! அரண்மனைக்கு வந்திருக்கலாமே !

[என்று சொல்லிவிட்டு, தவறிப் பேசிவிட்டோமே, என்ற நடுக்கத் தோடு தலைகுனிகிறாள். முகம் சிவக்கிறது. புரிந்துகொள்ளு கிறான் அம்பிகாபதி.]

அம் ; அமராவதி !

[அமராவதி மெதுவாகத் தலைதூக்கிப் பார்க்கிறாள். அம்பிகா பதியின் கரங்கள் அவனையும் அறியாமல் அமராவதியின் முக மலரைத் தாங்குகின்றன. அவள் மெய் சிலிர்க்கிறது. அவனுக் கும் அவ்வாறே ! அவளது கையைப் பற்றுகிறான் அம்பிகாபதி. அப்படியே அவளை மடியில் சாய்த்துக்கொள்ளுகிறான். களங்க மற்ற அவளது முகமலரிலே அவனது கண்கள் பதிகின்றன. மெல்ல - மிகமெல்ல - மென்வளைக்கை அள்ளிவிட, சில்லென் றிருந்த உடல் தீப்பாய, இதழோடு இதழ் சேர்த்து, வாழ்க்கை இன்பத்தின் முதற்படியைக் கட்டி முடிக்கிறார்கள் இருவரும்.]

அம் : அமராவதி ! கூந்தலழகி ! குளிர் நிலவு முகத்தழகி ! அன்ன நடையழகி ! அன்புதரும் சொல்லழகி ! வெண்நீல வானத்து விழியழகி ! தண்ணூரும் கொடியிடையில் சது ராடும் பேரழகி ! எடுத்த கவிஞரெலாம் எழுதிவைத்த காவியத்தை நாடெடுத்துப் பார்க்குங்கால் நடந்துவரும் தனியழகி !...........இன்னும் என்னென்னவோ நினைத் தேன் நேற்றெல்லாம் ! கிட்ட வரவும் பாதி மறந்தது ! தொட்டவுடனே முக்காலும் மறந்துவிட்டது !

அம : பெரும ! உலகத்தின் நடைபாதை இப்போதுதான் எனக் குப் பிடிபடுகிறது ! கற்பனை மேகங்களின் சாயல், இப்போது தான் அற்புதமான உருவம் பிடிக்கிறது !

அம் : தொட்டுவிட்டேன் ! ஆனாலும் ஒரு பயம் என் நெஞ்சைக் கவ்வுகிறது !

அம : என்ன !

அம் : உன் காதலுக்கு நான் அருகதையுள்ளவன்தானா !

அம : ஐயம் ஏன், அரசே !

அம் : அரசனல்ல, ஆண்டி ! ஏடும் எழுத்தாணியும் தவிர வேறு முதலீடு இல்லாத வணிகன் !

அம : அது போதுமே ! அந்த ஏட்டின் நிழலிலே நாடு தங்குமே ! உங்கள் பாட்டின் சுவையிலே பாரெல்லாம் மயங்குமே !

அம் : ஆட்டிவைக்கும் மன்னர் குலம் அதை அறியவேண்டுமே !

அம : ஏன் அச்சப்படுகிறீர்கள் !

அம் : குன்றுபோல் அன்னம் குவித்திருக்கிறது எதிரில் ! உண்ணத்தான் துடிக்கிறது மனம் ! ஊராள்வோர் கூர் வாளும் வண்ணமுடிச் செல்வாக்கும் மறிக்கிறது வந்து !

அம : கிடக்கிறது ! யாரும் தடுக்கமுடியாது நம்மை !

[இப்போது ஒரு குரல்]

குரல் : **எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
எண்ணுவ மென்ப திழுக்கு !

[அம்பிகாபதியும் அமராவதியும் திடுக்கிட்டு விலகுகிறார்கள். மல்லிகா வருகிறாள்.]

மல் : நீங்கள் வாழ்வதாக ! உங்கள் காதல் தழைப்பதாக ! (அமராவதி எழுந்து)

அம : என்னடீ இது ! நான் பயந்தே போய்விட்டேன் !

மல் : அஞ்சற்க ! நீங்கள் பேசிக்கொண்டே இருந்தால், என்னைத் தவிர இன்னொருவரும் பார்த்துவிடக் கூடாதே என்பதற்காகவே இடையில் குறுக்கிட்டேன் ! என்னை மன்னித்துவிடுங்கள் ! ஐயா, கவிஞரே ! தயவு செய்து சீக்கிரம் போய்விடுங்கள் !

அம : (கோபத்தோடு) மல்லிகா ! நீ பேசாமல் இரு !

மல் : உங்களுக்குக் கோபம்தான் வரும் ! சூழ்நிலையின் பயங் கரத்தை, உணரமாட்டீர்கள் ! இயற்கை உணர்ச்சிகள் இம்மியளவும் பிரியாமலிருக்கத்தான் சொல்லும் ! ஆனால், இது அரண்மனை ! சீறி எழுந்தார் மன்னர் என்றால், இதுவே இடுகாடாகி விடலாம் ! உங்களை நான் தடைப்படுத்த வில்லை ! ஆனால், 'ஞாலம் கருதினும் கைகூடும், காலம் கருதி இடத்தாற் செயின்' ! தயவுசெய்து இப்போது பிரிந்து விடுங்கள் ! மன்னர் வரும் நேரமாகிவிட்டது !

[அம்பிகாபதி, வெட்கத்தோடு ஒன்றும் சொல்லாமலேயே திரும்பி நடக்கிறான். அமராவதி அவன் போகும் திசையைப் பார்த்தபடியே நிற்கிறாள் : மல்லிகா அவளைத் திருப்பி அணைத்தபடி உள்ளே கொண்டு செல்கிறாள்]

—காட்சி முடிவு—

(தொடரும்)

அடுத்த இதழ்

தென்றல் 24-9-55 ந் தேதி இதழ் நிறுத்தப்பட்டுள்ளது. 1-10-55 ந்தேதி இதழ், 'வேலங் குடித் திருவிழா' தொடர் கதை யுடனும், மற்றும் பல சிறப்புப் பகுதிகளோடும் வெளிவரும்.

◉

திருத்தம்

சென்ற இதழ் 3-ம் பக்கம் 62-ம் வரியில் 'வீற்றிருப்போரால்' என்றிருப்பதை, 'வீற்றிருப்போர்' என்று திருத்திக் கொள்ளவும்.

கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

◉

18-9-55—கும்பகோணம்
19-9-55—புவனகிரி
20-9-55—சென்னை ஆரயிம் விளக்கு
21-9-55—குன்றத்தூர்
22-9-55—வேலாயுதம் பாளையம்
23-9-55—ஈரோடு

வள்ளுவன் மூத்தோன்!

காதலனுக்கு, மற்றொருத்தியின் நினைவு வரக் கூடாது என்பது காதலியின் விருப்பம். ஊடுந்தோறும், காதலி அதனையே சாக்காகச் காட்டுதல் இலக்கியப் பண்பாகும்.

"நீங்கள் யாரையோ நினைக்கிறீர்கள் !"

"அது எனக்குத் தெரியாமல் மறைக்கிறீர்கள்!"

"தும்முகிறீர்களே ! யார் உங்களை நினைக்கிறார்கள்"

"அந்த மற்றொருத்தி உங்களை நினைப்பதை நானறியாமலிருக்கவே தும்மலை அடக்குகிறீர்கள் !"

—இப்படியெல்லாம் காதலனது 'தற்காலிக'ச் செயல்களுக்குப் புது விளக்கம் கண்டு, கற்பனையில் ஒரு மூன்றுமவளை வடித்துக் கொண்டு ஊடுதலை, நாம், இலக்கியங்களில் காண்கிறோம். அதனைச் சிறப்புறக் காணும் இடம் வள்ளுவனது மூன்றும் பாலின் புலவி நுணுக்கம் பகுதிதான். அங்கே, காதலி, தும்மலுக்கும், நினைப்புக்கும் சொல்லுக்கும், புதுவிளக்கம் கொடுத்து ஊடுகிறாள்.

வழுத்தினுள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று.

—யான் தும்மினேனாக, அவள் நூறாண்டு என வாழ்த்தினாள் : உடனே அதை விட்டு, "யார் நினைத்ததால் தும்மினீர் ?" என்று கேட்டு அழுதாள் !—இது பொருள்.

நினைப்பைத் தும்மலில் தெரிந்து கொண்டவள் போல் நெருங்காமல் நின்று ஊடுகிறாள்.

ஆனால், கம்பனும் இது போன்ற ஒரு இடத்தைக் காட்டுகிறார். அதில் காதலி தூரத்தில் நின்று ஊடவில்லை. காதலனின் மார்பைத்தன் காலால் எட்டி உதைக்கிறாள் ! எப்படி ! 'கால் பந்து' ஆடுகிறாள் ! காதலன், அந்த உதையில் தன் மார்பின் மீதுள்ள தார், அனிச்சம் பூப்போலும் அவளது பாதத்தைப் புண்ணுக்கக் கூடாதே என்று கைகளால் மார்பை மூடுகிறான். உடனே காதலி, "யாரோ உன் நெஞ்சில் இருக்கிறாள். என் உதை அவள் மீது விழக் கூடாது என்று தான் மூடுகிறீர்கள்" என்று ஊடுகிறாள் !

இங்கே காதலி, 'நாட்டுப்புறம்' என் பார்களே அந்த உருவம் எடுக்கிறாள். மிருக குணக் காதலியாகிறாள். காதலனை உதைத்து ஊடுகிறாள்.

கொள்ளைப் போர் வாட்கணுளங் கொருத்தியோர் குமரனன்னான்
வள்ளற்றுர கலந்தன்னை மலர்க்கையாற் புதைப்பநோக்கி
உள்ளத் தாருயிரன்னுள்மே லுதைபடு மென்று நீர்நும்
கள்ளத்தாற் புதைத்தீரென்னு முன்னையிற் கனன்றுமிக்காள் !

—உண். ப-59-

காட்டு வெளியில், காமம் மிகுத்து, அடிதடிக் காதல் புரிந்து கல்லினும் முள்ளினும் கட்டிப் புரண்டு மிருகத்தனத்தை வெளிப்படுத்தும் பண்பினள், கம்பனின் காதலி.

உயர் குடிமங்கை ; மறவன் மகள் : நாகரிகம் தெரிந்தவள்; நல்ல காதலி ; வள்ளுவனின் 'காதலி'. வள்ளுவனிடம் 'நாகரிகம்'. கம்பனிடம் 'மிருகத்தனம்'—காரணம் இருவரது கருப்பொருள்களுள்ளும் இயங்கும் பண்புகள் வெவ்வேறு ! முன்னது திராடவிப் பண்பு ! கம்பனது, ஆரியப்பண்பு.

—கண்ணதாசன்.

புத்தி சொல்லுதல்!

அரபுப் பழமொழி

பலர் நடுவே ஒருவருக்குப் புத்தி சொல்லாதீர்.

ஜெர்மன் பழமொழி

புத்திமதியைக் கேட்டாலன்றி, தராதீர்.

ஸ்பானியப் பழமொழி

போருக்குப் போமாரே, மணம் புரியுமாரே, எவருக்கும் ஆலோசனை சொல்லாதீர்.

ஒரு கிரேக்க அறிஞன்

அறிவுரை பெறுவோர் பலர், எனினும், அறிவுள்ள சிலரே பயன் அடைகின்றனர்.

நண்பர்களைக் கண்டிக்க நேரிடின் தனித்துக் கண்டிப்பீர். ஆனால் பலர் நடுவே புகழ்ந்தே உரைப்பீர்.

அக்டோபர் முதல்தேதி எங்கும் கிடைக்கும் !

சண்டமாருதம்

(மாத மிருமுறை)

ஆசிரியர் :
கலைஞர் செல்லப்பாண்டியன்

துணை ஆசிரியர்கள் .
கலைஞர் சுடலையாண்டி, F. C. F.
கவி கா. பா. சொள்ளைமுத்து.

நிர்வாகி :
கவி சி. என். எஸ்.

விலை ஒன்றரையணு. ஏஜண்டுகள் எழுதுக

முன் பணம் கட்டுவோருக்கே இதழ் அனுப்பப்படும்.

◉

சண்டமாருதம்
142, மவுண்ட் ரோடு : : சென்னை 6

குறிஞ்சிப் பாவை...

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வளவுதான் தோழி பேசினாள். வேலனை அழைத்தால் தலைவியின் குறை போய் விடும் என்றெண்ணுகிறாள் தாய்; உண்மையை உணர்ந்த தோழி, அது முறையற்ற எண்ணம் ; தவறான கருத்து ; பயன் தரமுடியாத ஒரு செயல் திட்டம் என்றெண்ணுகிறாள். வேலன் வேண்டுகோட் கிணங்கிக் கடவுள் தான் வருவதாகக் கூறுவதையே அக்குறிஞ்சிப்பாவை மூடநம்பிக்கையாகக் கொள்கின்றாள். அதனால் வேலனைக் காட்டினும், அவன் அழைத்தால் வருவதாகக் கூறும் 'கடவுள் மடவன்' என்கிறாள். அறிவுக்கு வேலை தந்து உண்மையான காரணம் கண்டு அந்தக் குறையைக் களைய வேண்டும் என்ற எண்ணம் அக்காலத்து 'இளைஞர்' உள்ளத்தில் வேரூன்றியிருந்தது. அதன் விளைவாக அமைந்த நிகழ்ச்சிகள் பல வற்றை விளக்கிடுகின்றன இறவாதுள்ள தமிழ் நூல்கள்.

"தாய் வெறியாட விரும்பினாள்; அதனை நாம் தடுக்க வேண்டும்" என்று கூறும் தோழி வெறியாடும் களத்தையே நமக்குக் கூறுகிறாள். அதனைக் காண் போம்.

"ஆட்டின் கழுத்தை அறுத்து தினையையுடைய பிரப்பை தானியங்கள் வைத்து, ஓடுகின்ற ஆற்றுத் துருத்தியில் பலவகையான இசைக் கருவிகள் ஒலிப்ப 'பெரிய தெய்வங்கள்' பலவற்றை ஒருங்கு வாழ்த்தி இவள் பேயால் கொள்ளப்பட்டாள்' என்று கூறி நமக்கு வெறியாட நினைக்கின்றார்கள் தோழி. அவர்கள் மலைநாட்டுத் தலைவனிடம் நாம் கொண்ட களவொழுக்கம் பற்றி அறியாது இவ்வாறெல்லாம் செய்து நம்மைத் துன்புறுத்த எண்ணுவது நினைக்கவே வருத்தமாயுள்ளது,"

இவ்வாறு கூறிய தோழி வெறியாடும் களம் பற்றிய தோற்றம் ஒன்றை நாம் கொள்ளுமாறு செய்துவிட்டாள். வெறியாடல் மூலம், நோய் போக்கலாம் என்றெண்ணுகிறாள் தாய். வெறியாடல் மூலம் நம்மைத் துன்புறுத்துகிறார்கள் என்றெண்ணுகிறாள் தோழி. இறுதியில் வெறியாட்டத்தை நிறுத்தி விடவும் அவள் வழி செய்து விடுகிறாள். சில சமயங்களில் வெறியாடிய தலைவிகொண்ட நோய் போக்க எண்ணி வரும் வேலனையே தோழி நகைச்சுவை ததும்ப அவன் அறியாமையை அவனே உணரும்படியும் செய்வதுண்டு.

இலக்கியங்களில் பரவலாக அமைந்துள்ள இது போன்ற நிகழ்ச்சிகள் அக்கால மக்கள் மன நிலையை உணர்த்துகின்றன. வயது முதிர்ந்தவர்கள் மூட நம்பிக்கைகளுக்கு உட் படுவதும் இளைஞர்கள் அதனை அகற்றுவதும் எக்காலத்தும் நிலை பெறும் செயல்களே என்ற உண்மையினை அகப்பாடல்கள் உணர்த்துகின்றன. ★

திருமணம்

தோழர் ச. அய்யாப்பிள்ளை, தோழியர் மனோரஞ்சிதம் வாழ்க்கை ஒப்பந்தம் 11-9-55 ஞாயிறு காலை கோயில் பட்டி மணமகன் இல்லத்தில் ஆசிரியர் கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மண விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார். கழகத் தோழர்கள் ஏராளமாக வந்திருந்து மண விழா வினைச் சிறப்பித்தார்கள். நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆசிரியர் கண்ணதாசனுக்கு கைத்தறி ஆடையும் திராவிட கழகத்தின் சார்பில் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

இறுதியில் மணமக்கள் நன்றி கூற மண விழா இனிது முடிவுற்றது.

கங்கம்மா சபதம்...

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

சட்டியும் கிடந்தது. கருப்பையாத் தேவன் அதை எடுத்து அதிலிருந்த துளைக்குத் துணி வைத்து அடைத்தான்; கிணற்றில் இறங்கி அதில் தண்ணீர் கொண்டு வந்தான். துணியை நனைத்துக் கங்கம்மாவின் முகத்தைத் துடைத்தான். அவள் வெற்றிலைப் பாக்குப் பையில் வைத்திருந்த காண்டகத்தைத் திறந்து, சிறிது சுண்ணாம்பு எடுத்து, அவள் மூக்கில் பூசி ஈரத் துணியைக் கட்டினான். பிறகு தன் மடியில் இருந்த வரண்டு போன தோசை இரண்டை எடுத்துக் கொடுத்தான். அவள் அவற்றில் ஒன்றைத் தின்று தண்ணீர் குடித்துச் சிறிது களைப்பு நீங்கினாள். களைப்பு நீங்கியதும் தன் கதையைச் கருப்பையாத் தேவனுக்குக் கூறினாள். திருமலை நாயக்கன் பீசப்பூர் தளபதி யோடு மைசூர் மேல் படை எடுத்த போது, அவளும் அவள் தந்தையும் படையோடு வந்தனர். அவளைச் சத்திய மங்கலத்தில் நிறுத்தி விட்டு அவள் தந்தை போர்க் களம் நோக்கிச் சென்றான். பிறகு அவளைப் பற்றிய செய்தியே அவளுக்கு எட்ட வில்லை.

கங்கம்மா தன் சோகக் கதையைக் கூறிக் கொண்டிருக்கையில் குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது. கங்காவைக் கிணற்றங்கரைக்கு அப்பால் இருந்த ஒரு புதருக்குள் ஒளிந்து கொள்ளுமாறு அனுப்பினான் கருப்பையாத் தேவன். சிறிது நேரத்தில் இரண்டு மைசூர் வீரர்கள் குதிரைகள் மேல் வந்து கருப்பையாத் தேவன் அருகில் இறங்கினர்.

"இங்கே என்ன அண்ணே செய்யறே, தனியா? வாங்க. நம்ம தலைவரு எல்லாரையும் தயாராக இருக்கச் சொல்லியிருக்காரு, உங்களைத் தேடிக் கொண்டு தான் வந்தோம். பொழுது விடியப் போகுதில்ல.'' என்று கூறினான் அவ்வீரர்களில் ஒருவன்.

''ஒண்ணுமில்லே, அண்ணே! இந்தச் சத்தியமங்கலத்துச் சாக்குருவிகள் போடற சத்தம் கேக்கச் சகிக்கலை. அதுதான் இப்படி வந்தேன்'' என்று மழுப்பிய கருப்பையாத் தேவன் புதரை ஒரு முறை நோக்கிப் பெருமூச்சு விட்டு விட்டு அவர்களோடு புறப்பட்டான். மூவரும் மறைந்தபிறகு, கங்கம்மாள் வெளியே வந்தாள்; மதுரையை நோக்கி விரைவாக அடி எடுத்து வைத்தாள். மறுநாள் காலை மூக்கறுந்த கைதிகளை எல்லாம் மைசூருக்கு அனுப்பிவிட்டு, மைசூர்ப் படைகள் மதுரையை நோக்கி முன்னேறின; வழியில் அப்படைகள் எதிர்ப்பட்ட ஊர்களெல்லாம் சத்தியமங்கலத்தின் கதியையே அடைந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் மூக்கறுபட்டுத் துடித்தனர்.

மைசூர்ப் படைகளின் அழிவு வேலைகளும், மக்கள் மூக்குகளை அறுத்த இரக்கமற்ற செய்கையும் மதுரையில் நோய்வாய்ப் பட்டிருந்த திருமலைநாயக்கனுக்கு எட்டின. அவன் உடல் பதைத்தது. தன் உடல் நிலை மோசமாக இருப்பதைப் பயன்படுத்திக்கொண்ட மைசூர் மன்னனை எப்படியும் வெல்வது என்று முடிவு செய்துகொண்டான். திருநெல்வேலியைத் தனக்குக் கீழ் ஆண்டுவந்த இரகுநாதச் சேதுபதிக்குச் செய்தி அறிவித்து, உடனே ஒரு படையுடன் துணைக்கு வருமாறு கட்டளை யிட்டான். இரகுநாதத் தேவன் தன் பேரரசன் திருமலை நாயக்கனிடம் பேரன்புடன் வாழ்ந்தவன். ஆகவே, செய்தியைக் கேட்டவுடனே, 25,000 மறவர்களோடு புறப்பட்டு மதுரையை அடைந்தான். மதுரையில் திருமலை நாயக்கன் ஏற்கெனவே 35,000 வீரரை வைத்திருந்தான். மறவர் படையும் மதுரைப் படையும் இணைந்து, மைசூர்ப் படையை எதிர்க்கச் சென்றன.

மைசூர் வீரர்களின் கண்ணில் மிளகாய்ப் பொடி தூவிவிட்டு வந்த கங்கம்மாள், மதுரையில் இருந்த தன் தந்தை வீட்டை அடைந்தாள்; தந்தை நோயில் படுத்திருப்பதை அறிந்தாள். ''அப்பா!'' என்று அலறிக்கொண்டு ஓடினாள். மகளின் அவலநிலையைக் கண்டான் அந்த மறவீரன். மூக்கு அறுபட்ட செய்தியைக் கேட்டதும், அவன் மீசை துடித்தது; கண்கள் இரத்த மாயின.

''கவலைப்படாதே கங்கா. போர்க்களத்தில் மயக்கம் போட்டு விழுந்ததிலிருந்து உன்னை மறுபடியும் பார்க்கமுடியுமா என்று எண்ணி எண்ணி ஏங்கினேன். ஏதோ இந்த நிலையிலாகிலும் பார்த்து விட்டேன். மறுபடியும் கருப்பையாத் தேவனை நான் கண்டால் இருவருக்கும் கலியாணம் செய்து விடுகிறேன். வீணாகக் கண்ணீர் விடாதே, கங்கா. மதுரைப் படைகளும் திருநெல்வேலிப் படைகளும் பழிவாங்கப் புறப்பட்டு விட்டன. இரகுநாத சேதுபதி இலேசுப்பட்ட ஆள் இல்லை. இதோ நானும் புறப்படுகிறேன். நீ சாக்கிரதையாக இரு'' என்று கூறிவிட்டு நோய் உடம்போடேயே வாளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

சில நாட்களில் மைசூர்ப் படைகள் திண்டுக்கல்லுக்கு அப்பால் விரட்டப்பட்டன. மைசூர்த் தளபதி ஒரு முடிவும் செய்யாமல் காலம் கடத்திக்கொண்டே வந்தான். என்றாலும் ஒரு நாள் இருதிறத்துப் படைகளுக்கும் கடும்போர் மூண்டது. ஒவ்வொரு பக்கத்திலும் சுமார் 12,000 ஆட்கள் உயிர் இழந்தனர். இரகுநாத சேதுபதியின் துணிவு நிறைந்த செயல்களால் மதுரைக்கே வெற்றி கிடைத்தது. திருமலை நாயக்கன் அவனைப் பெரிதும் பாராட்டி அவனுக்குத் ''திருமலைச் சேதுபதி'' என்ற பட்டத்தை வழங்கியதோடு, அவன் கட்டி வந்த கப்பத்தையும் நீக்கிவிட்டான்.

என்றாலும், இந்த வெற்றியால் மதுரை வீரர்களுக்கு மன அமைதி ஏற்படவில்லை. மூக்கு அறுபட்ட மதுரைப் பெண்களின் உருவங்கள் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் நெஞ்சில் வளர்த்தது; இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்ட பின்னும் இந்த உணர்ச்சி மங்கவில்லை.

திருமலைநாயக்கன் தம்பி குமார முத்துவும், இரங்கண்ண நாயக்கன் என்ற பாளையக்காரனும் மதுரைப் படைக்குத் தலைமை வகித்து மைசூரை நோக்கி நடத்திச் சென்றனர், கங்கம்மாவின் தந்தை போரில் ஏற்பட்ட வெட்டுக் காயங்களால் இறந்துவிட்டார். அவள் முகக் காயம் ஆறிவிட்டது. என்றாலும் மூக்குப் போய்விட்டதால், இழந்த அழகை ஈடுசெய்ய முடியவில்லை. மதுரைப் படை மைசூர் நோக்கிச் செல்வதை கேள்விப்பட்டவுடன், அவளும் ஆணுடை பூண்டு கத்தி ஏந்திப் புறப்பட்டாள்.

சில நாட்களில் மதுரைப் படை மைசூர் நாட்டு எல்லையை அடைந்தது. மைசூர்ப் படைகள் முன் செய்த அட்டூழியங்கள் அனைத்தும் திருப்பிச் செய்யப்பட்டன. இறுதியில் மதுரைப் படைகள் மைசூரையே வளைத்துக் கொண்டன.

ஒருநாள் பின்னிரவு; அரண்மனைச் சுவரிலிருந்து ஒருவன் குதித்து வெளியே ஓடிக்கொண்டிருந்தான். அவனைப் பின்னாலேயே மற்றொரு வீரன் துரத்திச் சென்றான். இருவரும் மதுரைப் படைகள் தங்கியிருந்த இடத்துக்கு அருகில் வந்துவிட்டனர். முன்னால் ஓடியவன் காலில் ஏதோ தடுக்கியது. உடனே கீழே விழுந்தான். பின்னால் ஓடிவந்த வீரன் திடீரென்று அவன்மீது பாய்ந்து அவன்மூக்கை அரிந்த விட்டான்!

''அய்யோ!'' என்று அலறினான் மூக்கறுபட்ட வீரன். இக்குரலைக் கேட்டவுடன் அவன் முகத்தை உற்று நோக்கினான் மூக்கை அரிந்தவன்.

''அத்தான்! கடைசியில் உங்கள் மூக்கையா அரிந்து விட்டேன்!'' என்று தலைப்பாகையை எடுத்து வீசிவிட்டுக் கதறினாள் கங்கம்மா.

கருப்பையாத் தேவன் தன் வேதனையையும் மறந்து, ''கங்கா! நீயா? இங்கே எப்படி வந்தாய்?'' என்று கேட்டான். இரத்தம் ஒழுகிய அவன் முகத்திலும் ஒருவித மகிழ்ச்சி அலை ஓடியது.

''அத்தான்! மைசூரை நோக்கி மதுரைப் படைகள் புறப்பட்டதைக் கேள்விப்பட்டேன். பழிவாங்குவதற்கு இதுதான் ஏற்ற சமயம் என்று நானும் புறப்பட்டுவிட்டேன். மதுரை வீரர்கள் மைசூர் மக்களை நன்றாகப் பழிவாங்கி விட்டார்கள்; ஆயிரக்கணக்கான மூக்குகளை அரிந்து விட்டார்கள். நானும் நேற்றுவரை மூன்று வீரர்களின் மூக்குகளை அரிந்துவிட்டேன். நாலாவது ஆளுக்காகக் காத்திருந்தேன். மைசூர் வீரன் எவனும் வெளியில் தலைகாட்டவில்லை. கடைசியில் இந்தப் பக்கமாக வந்தபோது, ஒருவர் ஓடுவது தெரிந்தது. உடனே கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டு துரத்தினேன். பாவி நாலாவது மூக்காக உங்கள் மூக்கையே அரிந்துவிட்டேன்'' என்று தேம்பிக்கொண்டே கூறினாள்.

"என் மதுரை நாட்டு மக்கள் மூக்குகளுக்கு மாறாக, மைசூர் மன்னன் மூக்கையே அரிந்துவிட வேண்டும். அப்படிச் செய்யாமல் என் கங்காவின் கையைத் தீண்டுவதில்லை என்று நானும் முடிவு செய்து கொண்டேன். இன்று அரசனும் அரசியும் தூங்கும் அறைக்குள் புகுந்து அரசன் மூக்கை அரிந்து விட்டேன். உன் மூக்கைப் போல அரசியின் மூக்கையும் அலங்கோலப்படுத்தலாமா என்று எண்ணினேன். பின், ஒரு பெண்ணின் மூக்கை அறுப்பதா என்று அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டேன். மூக்கு அறுபட்டவுடன் அரசன் அலறினான்; ஆட்கள் வருவதற்குள் கீழே குதித்துத் தப்பி விட்டேன்.

"இதுவும் நன்மைக்குத் தான் கங்கா. உன்னை மணந்து வாழும்போது, உன்னை அழகில்லாதவள் என்று வெறுக்காமல் இருக்க இது துணைசெய்யும் அல்லவா? இருந்தாலும் நீ பொல்லாத பெண். செய்த சபதத்தைத் தவறாமல் நிறைவேற்றி விட்டாய். எனக்கு அப்போதே தெரியும், காவேரி பொய்த்தாலும் கங்கையின் சபதம் மட்டும் பொய்க்காது என்று!'' என்று புன்னகையோடு கூறினான். அவன் முகத்தில் பூத்த புன்னகையைக் கண்டவுடன் கங்கம்மாவின் உதடுகளிலும் அதன் சாயை நெளிந்தது. கருப்பையாத் தேவன் அவள் முகத்தை இழுத்துத் தன் முகத்தோடு இணைத்துக் கொண்டான்; இடை நின்று தடுக்க இரண்டு மூக்குகள் கூட இல்லை! ★

"நம் நாடு"

மூன்றாம் ஆண்டு விழா

தி. மு. கழகம்

இளம்பரிதி—செயலாளர், சென்னை மாவட்டம்.

செப்டம்பர் 17-1949-ம் ஆண்டு சென்னையிலே செயல் வீரர்கள் கூடினர், புயல் புகுந்த கட்டத்தை மாற்றியமைக்க. முயல் கூட்டம், முடிந்தது இவர்கள் 'வாழ்வு' என்று இறுமாப்பில் மூழ்கிக் கிடந்த நிலையினைக் களைவதற்கு புலி நிகர் மாந்தர் கூடினர். அயலவரால் அவமானப் படுத்தப் பட்டும், அரசியல் ஆருடக்காரர்களால், அழிந்து போனார்கள் என்று மதிக்கப் பட்டும் வந்த இழி நிலையைப் போக்க இலட்சிய சீயங்கள் கூடினர்.

கழகத்தை கண்ணின் மணியை போல் காத்தவர்கள், அதன் இலட்சியத்தை ஜீவனாகப் பாவித்தவர்கள், அதற்காகவே அல்லும் பகலும், அனவரதமும் அரும்பாடு பட்டவர்கள் அக் கொள்கைக்கு ஜூலை 9-ல் தலைவரால் ஏற்பட்ட கறையைக் கழுவிடத்தான் அன்று கூடினர்.

எந்த கொள்கைக்காக சர்வாதிகாரத்தைச் சகித்துக் கொண்டு கட்சிப் பணியாற்றினார்களோ அந்த உயரிய கொள்கை தலைவரின் பொருந்தாத் திருமணத்தால் புதை குழிக்குச் செல்லுவதை தடுத்து நிறுத்தவும், கொள்கை வாதிகள் என்பதை நிலைநிறுத்தவும், நெஞ்சுரமும் நேர்மைத்திறமும் படைத்தவர்கள் என்பதை பாரறியச் செய்யவும் அன்று அவர்கள் கூடிக் கண்ட புத்தம் புதிய அமைப்புதான் திராவிட முன்னேற்றக் கழகமாகும் !

ஆம் ! செப்டம்பர் 17-ந் தேதி திராவிட முன்னேற்றக் கழகம் முகிழ்த்தது. ஏளனம் பேசிய வாய்களைப் பூட்டவும், கிண்டல் பார்வைகளை வியப்புக்குறிகளாக்கவும், அவசரமாக அரசியல் ஆருடம் கணித்தவர்களை அதிர்ச்சி கொள்ளச் செய்யவும் திராவிட முன்னேற்றக் கழகம் முளைத்தது. காரிருள் விலகிவிட்டது, விடி வெள்ளி முளைத்து விட்டது, விடி சங்கு முழங்கி விட்டது என்பதை தி. மு. கழகத்தின் பிறப்பு சொல்லாமற் சொல்லுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் இருட்டை நீக்கிய நிலா, காலத்தே விளைந்த கதிர், சோகம் போக்கிய அமுதம் என்னும்-முன்பிருந்த பழைய நிலைக்கும் இப்போது கொண்டிருக்கின்ற புதிய நிலைக்கும் முன்னேற்றம் என்ற வார்த்தையை தவிர கொள்கையில் வேறொரு வித்தியாசமும் இல்லை. அடிப்படை ஒன்றுதான், அமைப்பு முறை தான் வேறு என்றும்—அமைப்பு முறை என்ற வாள், அன்பு என்ற கேடயம், கண்ணியம் என்ற கவசம், கட்டுப்பாடு என்ற முரசம், கடமையாற்றுவோம் என்ற முழக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் போர் முறையாகும் என்றும்-ஆர்வம் எனும் புரவிகள் பூட்டி அவைகளுக்கு நல்லெண்ணம், சகிப்புத்தன்மை எனும் கடிவாளமிட்டு, பண்பு எனும் பாதையில், தி. மு. கழகமெனும் தேரினை ஓட்டிச் செல்வோம் வாரீர் என்றும்-சென்னை ராபின்சன் பார்க்கில் கொட்டும் மழையில், நடுக்கும் குளிரில் செப்டம்பர் 18-ம் தேதி யன்று கூடியிருந்த மக்களுக்கு கொள்கை காத்த வீரர்கள் விளக்க முரைத்தார்கள்.

அந்த வரலாற்றுச் சிறப்பை பெற்றதனால் தி. மு. கழகத்தின் சரிதத்தில் மங்காத புகழொளியை அடைந்து விட்டது சென்னை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சரித்திரத் துவக்கமே திராவிடத்தின் தலைநகரான சென்னையாக அமைந்து விட்டது பெரும் பேறுகும்.

வீரர்கள் விடுதலை விருத்தம் பாடினார்கள். வீணர்கள் பாதையை விட்டு விலகினர். விவேகிகள் விளக்கவுரை ஆற்றினார்கள். வீங்கிய புயத்தோர் துவக்க விழாக் கொண்டாடினர் என்ற முறையில் கழகம் ஆங்காங்கே அரும்பு போல் தழைத்து ஆல் போல் விழுது விட்டு வளர்ந்தது.

மணம் பரவியது. முன்னேற்றக் கழகம் சந்திக்காத சிற்றூரோ பேரூரோ இருக்க முடியாது என்கின்ற அளவிற்கு அதனுடைய அமைப்பு பணி வளர்ந்து வந்தது. கழகத்தின் இந்த வானளாவிய வளர்ச்சி சர்க்காரை சஞ்சலத்தில் ஆழ்த்தவும், சர்வாதிகாரத்தைச் செலுத்தவும் செய்தது.

இதனுடைய நாடகங்கள் தடை செய்யப் பட்டன. இலட்சிய ஏடுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இறுதியில் கூட்டம் போடக் கூடாதென கட்டளை யிடப்பட்டன. ஆளவந்தாரின் இந்த அடக்கு முறை தாண்டவத்தைக் கண்டு கழகம் குமுறி எழுந்தது. ஆகஸ்டு 27-ந் தேதி 50-ம் ஆண்டில் கழகச் செயற்குழு கோவில் பட்டியில் கூடி ஆளவந்தாரின் ஆணவப் போக்கிற்கு முடிவு கட்டத் தீர்மானம் தீட்டியது.

நாடெங்கும் தடை மீறப்பட்டது. நூற்கள் படித்துக் காட்டப்பட்டன. நாடகங்கள் பொதுமக்களுக்கு நடித்துக் காட்டப்பட்டன. 9-9-50-ல் மத்திய மந்திரி திவாகர் வந்தார் சென்னைக்கு. சென்னையின் சீர்மிகு தொண்டர்கள் கூடினர். தியாகராய நகரில், வட நாட்டு ஆதிபத்யத்தை அரசியலில், பொருளியலில் வெறுக்கிறோம் என்பதை மத்ய பீடத்தாருக்குக் காட்டுவதற்காகக் கருப்புக் கொடி பிடித்தனர். திவாகர் திகைத்தார் திருவிடத்தாரின் எழுச்சிகண்டு.

இந்நேரத்தில் பிரசாரம் தங்குதடையின்றி நடை பெற ஒலி பெருக்கிகள் ஒத்துழைக்காததால் மாவட்டக்கழகம் இரண்டு நாட்கள் நாடகம் நடத்தி ரூ-3100 பெறுமான முள்ள ஒலி பெருக்கியை சொந்தமாக வாங்கியது.

மாம்பலத்து மாக்கியம் வல்லியாம் ஆச்சாரியார் 24-10-50-ல் சென்னைக்கு வந்தார். சென்னை படை திரட்டி கொடி பிடிக்கக் கோட்டைக்கு அருகாமையில் கூடியது. போலிசார் தடி கொண்டு தாக்கினர் அறப்போர் வீரர்களை. அதனால் ஆர்வம் அதிகமானதே தவிர குறையவில்லை. மாறாக, வாரக்கணக்கில் சிறைத்தண்டனை பெறும்அளவிற்கு எழுச்சிபெற்றது.

இந்த அடக்கு முறை தர்பாருக்கிடையே, தடியடித் தழும்புகள் இன்னும் ஆறாமல் இரணமாக இருக்கின்றபோது, சிறையில் பட்டக் கொடுமைகள் நினைவை விட்டு அகலாதிருக்கும் போது, சென்னை மாவட்ட தி. மு. கழகம் தனது முதல் மாவட்ட மாநாட்டை "சால்ட் கொட்டா" மைதானத்தில் ஜனவரி 21, 22-ல் 50-ம் ஆண்டு நடத்தி வெற்றிப் பரணி பாடியது.

இந்த இரு தேதிகளில் கேட்கப் பட்ட பேருரைகள் விழுப்புண் கொண்டோருக்கு வேதனை தீர்க்கும் மருந்தாகவும், அராஜகச் சர்க்காருக்கு அச்சுறுத்தும் எச்சரிக்கையாகவும், ஊழியர்களுக்கு உள்ளத்திற்கு நல் உறுதியாகவும் பயன் பட்டது.

மாநாடு நடத்தி வெற்றி கண்ட சென்னை மாவட்டக் கழகம், தலைமைக் கழகக் கட்டிட நிதிக்காக ரூ-3250ஐ பெருமிதத்தோடு கொடுத்து, தனது கடமையை செய்து முடித்த பெருமையை தேடிக் கொண்டது.

பருத்திக் கொட்டையையும், கத்தாழையையும், பிண்ணாக்கையும் தின்னும்படி மனிதர்களை மாடுகளாக்கிய அந்த மகானுபாவர், மத்திய உணவு மந்திரி முன்ஷி அவர்கள் 1-2-51-ல் சென்னை வந்தார். தென்னகத்துத்தீரர்கள் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். பிறகு வந்த மத்திய சர்க்கார் மந்திரி என். கோபாலசாமி அய்யங்காருக்குக்கருப்புக் கொடி காட்டியமறு மாதம், இவ்வளவு வெற்றிக்கும் காரணமாய் இருந்தவரும், தி. மு. கழகத்தின் துவக்கக்கால முதல் அயராது அருந்தொண்டாற்றிய அரிய நண்பரும், மாவட்டச்செயலாளருமான தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் தனது உடல் நலம் பாதிக்கப்பட்டதால் 10-5-51-ல் செயலாளர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்கள்.

வெள்ளை மனம் படைத்த தோழர் கோவிந்தசாமி அவர்கள் கட்சி ஊழியர்களின் மனதைக் கொள்ளை கொண்ட மாவட்டச் செயலாளராகும். செயலாற்றுவது என்பது அவருக்கு இனிக்கும் கரும்பு, போர் முனை கண்டு கலங்காத அவர் மனமோ இரும்பு, சுறுசுறுப்புக் காட்டுவதில் அவர் ஈடு இணையற்ற எறும்பு ! பகலென்றும் இரவென்றும் பாராமல் பசி, தூக்கம் என்ற சிந்தனையே எழாமல் கட்சிப்பணியாற்றிய சிறந்த தொண்டரைக் காணுவது அரிது. வெய்யிலென்றும் மழையென்றும் நினைக்காமல் வியர்வையும் இரத்தமும் சிந்தி, உடல் நலம் கெடுவதைக் கூடக் கவனியாமல்காரியம் ஆற்றி கட்சியை வளர்த்த தோழர் கோவிந்தசாமி மறக்கொணாத எழுச்சி ஓவியமாகும் ! இவர் காலத்தில் மாவட்டக் கழகம் ஏறு நடை போட்டு வீர உலாவந்தது என்றால் மிகையாகாது.

17-6-51 தோழர் என். வி. நடராசன் அவர்கள் மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் காலத்தில் தான் இந்தி எழுத்து அழிப்புப் போர் நடைபெற்றது. இந்தக் காலத்தில் சென்னைத் தோழர்களின் உணர்ச்சியும் உத்வேகமும் உச்ச நிலையை அடைந்தது கிளைக் கழகங்கள் புதியதோர் வலிவும் பொலிவும் பெற்றுத் திகழ்ந்தன. 6-10-51-ல் சென்னை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா விடம் ரூ-1000 மாநில மாநாட்டு நிதிக்கென்று அளிக்கப்பட்டது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற தி. மு. கழகத்தின் முதல் மாநிலமாநாடு ஓர் உணர்ச்சிக் காவியம் ! அது தீட்டப்பட்ட திருவிடம் சிங்காரச் சென்னை. அது போது நம்முடைய எதிரிகள் கிலி கொண்ட மனத்தினராய் உலவவும், நமதரும் தோழர்கள் களிகொண்ட முகத்தினராய் பவனி வரவும், மாற்றார் மருளவும், மக்கள் பெரு வெள்ளம் போல் திரளவும், சர்க்கார் குறுக்கெழுத்தாளர்களின் மூலம் உளவறியவும்

(16-ம் பக்கம்)

திறமை பற்றி !

சீனத்துப் பழமொழி

"திறமை மிக்க மனிதனுக்குப் பின்னால் எப்பொழுதும் மற்ற திறமை மிக்க மனிதர்கள் காணப்படுவார்கள்"

ஆங்கிலக் கவிஞன் ஒருவன்

நம்மைப் பற்றி நாமே மதிப்பிடும் போது, நம்மால் என்னென்ன செய்யக் கூடும் என்பதை எண்ணி மதிப்பிட்டுக் கொள்கிறோம். ஆனால் பிறர் நம்மைப் பற்றி மதிப்பிடும் போது, அதுவரை நாம் என்னென்ன செய்துள்ளோம் என்பவைகளை வைத்தே மதிப்பிடுகிறார்கள்.

பிரஞ்சு மாவீரன்

தக்க வாய்ப்பின்றி திறமை மட்டும் ஏதும் சாதிக்காது.

குறிஞ்சிப் பாவை

"அமினுவை வீட்டை விட்டுக் கட்டாயப் படுத்திக் கடத்திச் சென்று அவளைக் கெடுத்து விட்டார் சோமு என்பது எல்லா வகையாலும் உறுதியாகி விட்டபடியால் அவரைக் குற்றவாளி என்று முடிவு செய்ய இடமுள்ளது. அமினு மணமானவள் என்பதை எண்ணிப் பார்த்தேனும் சோமு தன் தவறான எண்ணங்களைத் தடுத்துக் கொண்டிருக்கலாம். அப்படிச் செய்ய வில்லை அவர். எனவே, தான் செய்தது தவறு என அவர் ஒப்புக் கொண்டதால் சட்டப்படி 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கின்றேன்" என்று உயர்நீதி மன்றத்தில் நீதிபதி ராமையா வழங்கிய தீர்ப்பைக் கண்டு எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. நான் சிரிக்காமல் என்ன செய்ய முடியும்?

"அமினுவை உள்ளபடியே இராமநாதபுரம் அழைத்துச் சென்று அவளிடம் இன்பம் பெற்ற நான் இருக்க, ஒரு குற்றமும் அறியாத யாரோ ஒருவன் தண்டனை பெற்று விட்டான். உலகமே பணத்தால் இயங்குகிறது. இந்த நூற்றுண்டு பணம் கொண்டு பலவும் சாதித்துக் கொள்வதற்குத் துணை செய்கிறது. இதுதானப்பா உலகம்!" என்று அடுத்த அறையில் இருவர் பேசிக்கொண்டிருந்தது ஊரெல்லாம் அடங்கிய அந்த நள்ளிரவில் எனக்குத் தெளிவாகக் கேட்டது.

அமினு...சோமு...அடுத்த அறையில் இவ்வளவும் பேசிய காளிதாசன். இவர்கள் மூவரையும் எண்ணிப் பார்த்தேன். அமினு நாளும் தன் தமையன்மார்களால் துன்புறுத்தப் பட்டு வருகிறாள் என்பதை இவனே கூறுகின்றான். துன்பங்கள் பலவற்றுக்குக் காரணமான இவன் மகிழ்ச்சியாக நண்பனிடம் பேசிக் கொண்டிருக்கிறான். ஒரு குற்றமும் அறியாத சோமு சிறைக்கு அனுப்பப் பட்டான். இவனது வெறிச் செயலுக் காளாகியவள் துன்புறுத்தப் படுகிறாள். உண்மைக் குற்றவாளி ஊராரின் முன்னர் நாணயமான வன் போல நடமாடுகிறான். அவனைக் கண்டால் அஞ்சிநடுங்கிடவும் செய்கிறார்கள் மக்கள். இந்த நிலையில் உலகம் போய்க் கொண்டிருந்தால் சமுதாயம் என்று தான் ஒழுக்கம் அமைந்ததாக இருக்குமோ தெரிய வில்லை. சமுதாயத்தில் காசைக் காட்டி கற்பைக் கேட்கும் கயவர்கள் ஒழியும் நாள் எந்நாளோ அந்நாளே தாயகம் உயர்ந்த நாளாகக் கருத முடியும்.

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டே நான் படித்துக் கொண்டிருந்த "குன்றக்குரவை"யைத் தொடர்ந்து படிக்கலானேன். சேரர் இளவல் இளங்கோ மூவேந்தரின் ஒற்றுமை வேண்டிச் செய்த பெருநூலில் அகப் பொருள் கருத்துக்கள் பலவாக உள்ளனவே என்றெண்ணினேன். "மரபு வழி அமைந்த அகப் பொருட் சுவையுடைய பாக்களை ஆசிரியர், நூலைக் கற்பவர் வெறும் வரலாற்று நிகழ்ச்சிகளை மட்டும் படித்து வெறுப் படையாதிருக்க ஆங்காங்கே அமைத்துள்ளார்." என்று ஒரு பேராசிரியர் கூறியது நினைவுக்கு வருகிறது.

அகப்பொருட் சுவையுடைய அப்பாடல்கள் மரபு வழி வந்தவை தான் என்றாலும், அக்கால மக்கள் மனத்தை விளக்கிடுவனவாகவும் உள்ளன. காரண காரியம் உணராமல் விதி என்றும் கடவுள் செயல் என்றும் கூறிக் காலம் கடத்துவோர் இன்றும் பலராக உள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் விதி என்ற சொல்லையோ கடவுள் செயல் என்ற சமாதானத்தையோ தங்கள் சொந்த வாழ்க்கைக்குத் தொடர்பான செய்திகளில் புகுத்திக் கொள்ள மக்கள் தயங்கினர். மாறாக, விதி கடவுள் செயல் என்று சொல்வதை மடமை என்றனர் காரண, காரியம் உணராமல் விதியையும் கடவுள் செயலையும் கூறித் தங்கள் வாழ்வைப் பாழ் படுத்திக் கொள்ள அம் மக்கள் விரும்பவில்லை.

மலைநாட்டு மங்கை அவள். அவள் நாளும் குடமொன்றை இடையில் தாங்கி, நீர் கொணரச் சுனை செல்வாள். குடமொன்றைக் கொண்டு அழகு நடை நடக்கும் அரணங்கைக் கண்டான் மலைநாட்டான் ஒருவன். அழகியின் அழகு அவனைக் கவர்ந்தது பேசவழியறியாது திகைத்த அவன் தனக்கும் அவளுக்கும் உரிய தூதாகத் தனக்கு நன்றாகப் பழக்கமாயிருந்த குழலிசையைக் கொண்டான். நீர் மொண்டு திரும்பும் மங்கையவள் இனிய இசையையும் பருகிச் செல்வாள். நாளடைவில் இருவரும் காணுவது நின்று பேசத் தொடங்கினர். பலர் அறிய நின்று பேச அவர்கள் தயங்கினார்கள். மறைந்து வாழ்பவர்களையே பலருக்கு அறிமுகப் படுத்தி விடும் ஆற்றலையே கலையாகப் பயின்றுள்ள மக்கள் மிகுந்திருந்த அக்காலத்தில் அவர்கள் அவ்வாறு பேசத் தயங்கியதில் வியப்பில்லை. அந்தத் தயக்கத்தின் விளைவாக 'இரவில் காணுவது' என்ற முடிவுக்கு இருவரும் வந்து விட்டனர். இதற்குத் தோழியும் துணையாக நின்றாள். இந்த இன்ப நிலையில் சிறிது காலம் கடந்தது.

இரவில் காணுவதும் நின்றது. அதற்குக் காரணம் ஊரார்தான். நல்ல நிலவு அன்று. அன்றும் அவன் வழக்கம் போல் அழகியைக் கண்டு பேசி மகிழவந்தான். வந்தவன் சற்றும் எதிர்பாராத நிலையில் ஊர்க்காவலர் கண்ணில் பட்டு விட்டான். அவ்வளவு தான், ஊரெல்லாம் இது பற்றியே பேச்சாக இருந்தது தலைவியின் தாய்க்கும், இது தெரிந்து விட்டது. அதன் விளைவு தான் இரவில் அவர்கள் கண்டு மகிழ்தற்குத் தடையாக அமைந்தது. அவனோ இது அறியாது இரவில் வந்து வந்து ஏங்கி நின்று திரும்பிய நாட்கள் பலவாகும்.

தன் உளம் கவர்ந்தவனைக் காண முடிய வில்லையே என்ற ஏக்கத்தால் அழகியின் உள்ளம் வருந்தியது. அதனால் உடல் மெலிந்தது. அவளின் உடல் மெலிவையும் உள்ளச் சோர்வையும் கண்ட தாய், அது 'குறையால் நேர்ந்தது' என்றெண்ணி அதனைப் போக்கத் தக்க முயற்சிகளில் ஈடுபடலானாள். வேலனை அழைத்து வெறியாடச் செய்ய வேண்டும் என்பது தான் அவள் திட்டம். வேலனை அழைத்து வெறியாடச் செய்து விட்டால் மகளுக்குள்ள 'தெய்வக்குறை' நீங்கி விடும் என்பது அவளின் எண்ணம்.

இதனை உணர்ந்தாள் தோழி; அவள் உள்ளம் சிரித்தது: உண்மையான காரணம் இவர்கட்கெல்லாம் தெரிந்திருந்தும் கூட அதைப்பற்றியே எண்ணுமல் வேலனை அழைத்து வெறியாட விட்டால் தலைவியின் குறை போய் விடும் என்றெண்ணும் இவர்களுடைய மடமையை என்னென்று சொல்வது என்று நகைத்தது அவள் உள்ளம். மலைநாட்டவனால் ஏற்பட்ட 'மனநோய்' வேலனின் வெறியாட்டத்தால் தீராது என்பது அவளுக்கல்லவா தெரியும்! இவ்வாறு வேலனை அழைத்து வெறியாடச் செய்வதை விட அவ்வாறு செய்ய எண்ணுவதையே தவறாகக் கருதினாள் தோழி. அவளுக்கு இதெல்லாம் மூட நம்பிக்கையாகவே பட்டது. அவள் தலைவியிடம் இது பற்றிப் பேசுவதைக் காண்போம்:

"தோழி, நகைக்கத் தக்க நிகழ்ச்சியொன்று நம்மைப் பின்னணியாகக் கொண்டு நடை பெறுகிறது என்பதை, நீ அறிவாயா? அறியாவிட்டால் மடமை மிக்க அந்நிகழ்ச்சியை நான் கூறவேனும் அறிந்து கொள். மிளகுகள் மிகுந்து வளரும் வளப்பமுடைய மலைநாட்டான் செய்த நோய்தான் இது என்பதை உணர்ந்து கொள்ள முடியாத நம் அன்னை, இது 'தெய்வக்குறை' என்றெண்ணி, வெறியாடலை விரும்பி வேலன் வரட்டும் என்று சொல்லிவிட்டாள்.

"இந்த நிகழ்ச்சியைக் கேட்க உனக்கும் நகை பிறக்கிறதல்லவா? மலைவளம் உடைய நாட்டுத் தலைவனால் ஏற்பட்ட உனது உடற்சோர்வையும் மனக் குறையையும் தீர்க்க, வேலன் வருவானேயானால் அவன் 'மடவன்' என்று கொள்வோம். தாய் சொல்வது போல உன்னிடம் ஏற்பட்ட மாற்றத்துக்குத் 'தெய்வக் குறை தான்' காரணம் என்று சொல்லி வெறியாடி உன் குறையைத் தீர்ப்பதாகக் கூறிவரும் வேலனை மடவன் என்று தானே சொல்ல வேண்டும்!

"அந்த வேலன் பாடல்கள் பாடி இசையெழுப்பி முருகனை வரவழைத்து உன் குறையைப் போக்குவதாக உள்ளான். ஆய்தல் உள்ளம் அற்ற வேலனின் வேண்டுகோட்கிணங்கி முருகனும் வருவ

ம. ரா. இளங்கோவன்

தாக வைத்துக் கொண்டால் வேலனைக் காட்டினும் அவன்தான் மடவன்!'

"எனக்கென்னவோ தோழி, இது வெறும் கேலிக் கூத்தாகவே முடியும் என்று தான் தெரிகிறது. ஆலமர் செல்வன் (சிவன்) புதல்வனை அழைத்து உன் நோய் களைவதாகக் கூறி வருகிறான் வேலன். அவன் மடமையை நாம் என்னென்று சொல்வது! வேலன் மட்டுமா மடவன், அவன் வேண்டுகோட்கிணங்கி வருவதாகக் கூறப்படும் ஆலமர் செல்வன் புதல்வன் (முருகன்) வேலனை விட மடவனாகிவிடுவான்"

(12-ம் பக்கம்)

ஸ்ரீ ராஜேந்திரா
மில்ஸ் லிமிடெட்,
சேலம்.

தபால் பெட்டி: 1.
போன்: 45. தந்தி: ராஜேந்திரா.

29,328 கதிர்கள்

கைத்தறிகளுக்கும், விசைத்தறிகளுக்கும், ஏற்ற ஒத்தை, மடக்கு, இரட்டை கோன் ஸ்டேபிள், பைப்பர் நூல்களையும் தயாரிக்கிறோம்.

ரஸ்புடீன்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ரஸ் : அந்த வானம்பாடியை' இழக்கலாமாடா ?

சிஷ் : திடீரென்று பாய்வான்,

ரஸ் : நான் குந்திக்கொண்டிருந்து விடுவேனே ?

சிஷ் : அவஞ்சேதி உங்களுக்குத் தெரியாதுங்க,

ரஸ் : எஞ்சேதி தெரியுமாடா உனக்கு ? பகலில் தூண்டில் முள்ளை நெருடியும், இருட்டிப் போனால் அயலார் உடைமையைத் திருடியும் மனைவிமக்களைக் காப்பாற்ற முடியாமல் அவர்கள் வதங்கிய முகங்காளைப் பிடியாமல் ஊரை ஏமாற்ற ஒரு வழி தேடிச் சாராயக் கடையில், தான் சம்பாதிச்சதுதான் இந்தத் தாடி.

சந்நியாசி என்றும் சாதாரணங்களைக் கண்டால் உபன்யாசி என்றும் மடையர்களிடம் போய் உபவாசி என்றும் உள்ளூராரிடத்தில் பரதேசி என்றும் ஏமாந்த பெண்களிடம் சுகவாசி என்றும் பேசி பொய்யையும் புனைசுருட்டையும் அள்ளிவீசி மெல்ல மெல்ல அரண்மனையைப் பிடித்துப் போட்டு அடித்தேன் அதிர்ஷ்டச்சீட்டு,

மட்டமென்றும் உயர்வென்றும் தாழ்ந்த வர்க்கமென்றும சொர்க்கமென்றும் வாய்ப்பந்தல் போடும் மதவெறியை எழுப்பினேன். சட்டதிட்டத்தைக் குழப்பினேன்; மக்களின் தன் மானத்தை மழுப்பினேன். நீ தான் பார்க்கின்றாயே என் மார்பிற் புதையாத மங்கையர் ஏது ? நானோர் ஊர்திருடிப்பயல் என்றாலும் சார் ஆளும் ரஷ்யாவில் நானோர் அசல் சாது.

என்னையும் வணங்கித் தன் மனைவியைத் தரவும் இணங்கினான் போவ்பிரபு என்றான், போகாதிருக்கலாமாடா புளிக் கட்டு ! (போதல்.)

3

விருந்து

[ஒருபக்கம் பலர் உட்கார்ந்திருக்க மற்றொரு புறம் போவ் ரஸ்புடீனைச் சந்திக்கிறான்.]

ரஸ் : எங்கே தங்கள் சீமாட்டி ?

போவ் : வாருங்கள் - கலவை ரொட்டி - சுவை பாருங்கள்.

[ரஸ்புடீன் அருந்துகிறான்.]
(மற்றொருபுறம்)

போவ் : (தன் சகாக்களிடம்)
விஷ ரொட்டியை !
விக்காமல் ! !
சொக்காமல் !!!
விழுங்கிக்கொண்டிருக்கிறானே !!!!
சாகவில்லையே !!!!!

[போவ் உட்பட மூவர் ரிவால்வரைச் சரி பார்த்து, கால்சட்டைப்பையில், கையுடன் மறைத்தபடி ரஸ்புடீனை அடைகிறார்கள்.]

ரஸ் : எங்கே சீமாட்டி ?

[ஒருவன் அங்கிருந்த சிலுவையைக் காட்ட, (ரஸ்புடீன் அதை அண்ணாந்து பார்க்கிறான்) போவ், ரஸ்புடீன் பின்புறம் மாறி அவன் முதுகில் சுட்டுவிடுகிறான். மூவரும் கதவைச் சாத்திக்கொண்டு வெளியில் ஓடுகிறார்கள்.]

போவ் : "கரடி ஒழிந்தது."
(அதே நேரத்தில்)

ரஸ் : (கதவைத் திறந்துகொண்டு ரஸ்புடீன் வெளியில் தள்ளாடிக் கொண்டு வருகிறான்) எங்கே சீமாட்டி ?

பலர் சுடுகிறார்கள்.

முடிந்தான் ரஸ்புடீன்.

விருந்தினரில் ஒருவன் :—

ஆளவந்தார்க்கு மானம் ஈனம் இரண்டும் சமானம் !

ரஸ்புடீனுக்கும் இது நல்ல வெகுமானம் !! ☆

தி. மு. க....

(14-ம் பக்கம் தொடர்ச்சி)

மூன்று நாட்களாக அந்த மாட்சிமை பொருந்திய மாநாடு சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நடைபெற்றது; அதன் வரவேற்புக்குழுச் செயலாளராக இருந்தவர் தோழர் என். வி. நடராசன் அவர்களாகும். சென்னை இந் நிகழ்ச்சியால் அதிக முக்யத்வம் பெற்றது.

2-11-52-ல் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் காலத்தில் தான் 14-12-52-ல் கூடிய தஞ்சைப் பொதுக்குழுவின் "கைத்தறி விற்பனை" தீர்மானத்தின்படி 53-ம் ஆண்டு ஜனவரி 4-ம்தேதி கலைஞர் கருணாநிதி அவர்களால் சென்னையில் ரூ-4000-க்கு மேல் கைத்தறித் துணிகளை விற்பனை செய்து தனது கீர்த்தியை நிலை நாட்டிக் கொண்டது.

தஞ்சை புயல் நிவாரண நிதிக்காகக் கிளைக் கழகங்கள் வீதி வீதியாக அலைந்து பொதுமக்களிடம் உண்டியல் தண்டி, துணி மணிகள் கேட்டுப் பெற்று தனக்குரிய பங்கினைச்செலுத்தின. "திராவிடர் திருநாள்" 15-1-53-ல் மற்றவர்களை விட இவர் காலத்தில் தான் வெகு விமரிசையாக பெரிய தேரர் விழா வினைப்போல் கொண்டாடப்பட்டது. தோழர் கண்ணபிரான் அவர்களின் காலம் தி. மு. கழகத்தின் வரலாற்றுப் பெருமை படைத்த போராட்டக் கட்டத்தில் மிக முக்கியமான தாகும்.

தி. மு. கழக சென்னை மாவட்ட இரண்டாவது மாநாடு ஜூலை 11,12 தேதிகளில் நடை பெற்றது. அம்மாநாட்டின் வரவேற்புக்குழுச் செயலாளரான தோழர் கண்ணபிரானே சிறையிலே கிடந்தார். என்றாலும் மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டு, போராட்டத் தீர்மானங்கள் போடப்பட்டு இனிது முடிந்தது. போராட்டக்களமும் நேரமும் குறிக்கப் பட்டதின் பெருமை இம் மாநாட்டிற்கு உரியது.

மறு நாள் தலைவர்கள் அறிவகத்தில் கைது செய்யப்பட்டனர். புலிகளை சிறையில் அடைப்பதால் புரட்சி பொசுங்கிவிடும் என்று புவியாள்வோர் கருதினர் போலும் ! ஜூலை 15-ந் தேதி மும்முனைப் போராட்டத்தை திராவிடனாகப் பிறந்த எவனும் மறக்கமாட்டான். எழுச்சி கொண்ட திராவிடர்களால் இன உணர்ச்சி என்ற எழுத்தால் எழுதப் பட்ட வீரகாவியமாகும் ஜூலைப் போராட்டம். ஆள்வலியும், தோள் வலிவும் மிகக் கொண்ட சென்னை, ஆயிரமாயிரம் தொண்டர்களை சிறைக் கூடத்திற்கு அனுப்பி, ஆளும் சர்க்காரை கிடுகிடுக்கவைத்து அலட்சியம் செய்தவர்களை அதிர வைத்து, சட்டமன்றத்தில் பேச வைத்து, தனது இலட்சியப்பாதையை சுட்டிக் காட்டிற்று.

நாடு கொந்தளிப்பில் மூழ்கிக் கிடந்த வேளை, தலைவர்கள் காராக்கிரகத்தில் அடைபட்டுக் கிடந்த காலை, அலகாபாத் பண்டிதர், ஆசியாவின் ஜோதி அக்டோபர் 2-ம் தேதி சென்னையில் பவனி வந்தார். இலட்சியச் சுடர் வீசும் கண்களோடு இரும்பு இதயத்தோடு ஆயிரம் ஆயிரம் காளையர் கூடி கருப்புக் கொடி காட்டி வெறுப்பினைக் கொட்டினர். கூலிப் பட்டாளங்களின் காலித்தனம், கேவிபுரியும் அரசியல் கயமைத்தனம், இது எதும் அந்தக் கர்மவீரர்களை அசைத்து விடவில்லை. வெற்றித் துந்துபிதான் முழக்கினர்.

அரைக்க அரைக்க மணங்கமழும் சந்தனத்தைப் போல், அடிக்க அடிக்க உயர எழும்பும் பந்தினைப் போல், பட்டை தீட்டத் தீட்ட ஒளி விடும் வைரம் போல் தி. மு. கழகம் அரசியலாரின் இந்த அடக்கு முறை வெறித்தாண்டவங்களால் வேக வேகமாக வளருகிறது.

55-ம் ஆண்டு ஏப்ரல் 17-ந் தேதி சென்னை மாவட்டத் தேர்தல் நடந்த ஒரு வாரத்திற்குப் பிறகு 24-ந் தேதி சென்னை வண்ணையில் தி. மு. கழகத்தின் புதிய பொதுக் குழுகூடி, புதிய பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுத்து இரண்டாவது மாநில மாநாட்டிற்கான பங்கீட்டுத் தொகை ரூ-2000 என முடிவு செய்தது. சென்னை மாவட்டம் ரூ-5000 தருவதாக உறுதியளித்து அந்த வெற்றியை எட்டிப் பிடிக்கும் தூரத்தில் இருக்கிறது. இந்தப்பெருமை கொள் முயற்சியை ஆறாண்டு காலப் பணியை முடித்துவிட்டு இன்று ஏழாவது ஆண்டு துவக்க விழாவை பெருமிதத்தோடு கொண்டாடுகின்ற இந்தப் பொன்னான நாளில் பூரிப்புடன் கூறிக் கொள்கிறேன். நம்முடைய இலட்சியப் பாதையை அடைவதற்கு நாம் முன்னேற்றம் என்ற விளக்கை கையிலேந்தி உள்ளோம். நம் உழைப்பு அந்தச் சுடர் விளக்கின் திரியாகட்டும் ! நம் சாதனைகள் அச்சுடரொளிக்கு ஊற்றும் எண்ணையாகட்டும். வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம், வளர் அதன் கொள்கைகள் என்று வீர முழக்கம் செய்து, இலட்சியப் பாதையிலே விரைந்து செல்வோம் ! வெற்றி நமதே !! ☆

◉

பள்ளிக்கூட
நூல் நிலையங்கட்கு

போலி இளவரசன்	0-8-0
மந்திரக்கல்	0-6-0
அசடு வழிந்தது	0-8-0
பாரதியார் பாடல்கள்	0-8-0

மாணவர் இல்லம்,
நுங்கம்பாக்கம், சென்னை - 6.

◉

வெண்பாப் போட்டி

15. தொட்டாலும் தோன்றும் சுகம்!

வெண்பாப் போட்டி 15-க்கு வந்துள்ள வெண்பாக்களில் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்களையும் சென்ற இதழில் வெளியிட்டுள்ளோம்; மீதமுள்ளவைகளைக் கீழே தந்துள்ளோம்.

முல்லைச் சிரிப்பியும் முத்தொளி மார்பகத்தாள்
மெல்லவே கையை மிகநீட்டி--கல்லதொரு
பொட்டதனை என்னுதலில் பொன்ருது தான்வைக்கத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ந. சிவஞானம், புதுக்கோட்டை.

★

மன்னியசீர் மாக்குழந்தை மாவீரன் காவியத்தைக்
கன்னற் றமிழ்ப்பாவாற் செப்பினன்--அன்னதுதான்
மட்டாரும் மென்மலரோ! மங்கையரின் பொன்னுடலோ!
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—த. செந்தமிழ்ச்செல்வி, திருச்செங்கோடு.

★

வான்நிலவைக் காண்டல் வளர்சுகம்; மேதக்க
தேன்தமிழைக் கேட்டல் செவிச்சுகமே;--பூண்அணியாய்
மட்டில் சுகங்காண் வகுத்துண்ணல்; மக்களைநாம்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—'கருவூர்ச்செல்வன்', அரக்கோணம்.

★

நினைவால் மெலிவாள் நிறையழிவாள் பாங்கி
புனைவாள் அதுவும் பொருஅள்--மனையகத்தே
பட்டாலும் பஞ்சாலும் பாவை துடித்திடயான்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ஆ. அழகன், புதுச்சேரி.

★

செஞ்சொல் மறத்தமிழர் சீர்மையைத் தேய்த்துவிட்ட
நஞ்சான ஆரியத்தின் நர்வறுத்து--எஞ்ஞான்றும்
மட்டிலா இன்பமிகும் மாண்புத் திருக்குறளைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—கோவி, போளூர்.

★

முன்னர்உண் டானமொழி முத்திறமும் கொண்டமொழி
தென்னனொடு மூவரும்தொல் தெற்கிருந்த--மன்னரெலாம்
பட்டாலே தொட்டிலிட்ட பைந்தமிழை நாக்கொண்டு
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ஆ. சுப்ரமணியன், பேருவூரணி.

★

சேத்தவட வாரியமும் சான்றோர்கள் யாத்திட்ட
சத்தான செந்தமிழுக் கீடாமோ?--மெத்தெனவே
கட்டி யணைக்கும் கிழத்தியினும் செந்தமிழைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—வேலூர். வ. இலக்குவன்.

★

இந்தி யுயர்வென் றியம்பிடு மேழைகாள்!
புந்தியி லிந்தியோ பேர்படைத்து--மந்தியிந்தி
நட்டாலு முள்ளத்தே நஞ்சாகும், செந்தமிழைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—மு. தேவராசு, கோவை.

★

கண்ணோடு கண்ணதனைக் கவ்விடுவாள் கோகிலம்போல்
மண்ணோடு காதலிசை பாடிடுவாள்--மண்ணுலகோர்
'கிட்டாதர்' என்றேங்கும் கன்னியடா! அன்னவளைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—விஸ்வம், கோவை.

★

பஞ்சம் பரவியதால் பட்டினிக்கு ஆளாகி
நெஞ்சம் உலர்ந்திடவே நாடுகிறேன்--கஞ்சியினை!
வாட்டும் பசிப்பிணியை ஓட்டப் பிடிசோற்றைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ஏ. சிவா, வேலூர்.

★

என்னருமைத் தாயகந்தான் எத்தர் பிடிநீங்கி
தன்னுரிமை பெற்றுத் தனிநாடாய்--முன்போல்
திட்டமுடன் வாழும் திருநிலையை நம்நினைவால்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ந. ஜாபர், தேவத்தூர்.

★

நாள்முழுதும் தானுழைத்து நள்ளிரவில் வீடெய்தி
தோள்சோரக் கூழின்றித் தூணுவான்--தாள்மீது
தட்டிவிளை யாடுகின்ற தன்சிறுனின் மென்னுடலைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—எம். என். சையது, திருச்சி.

★

மின்னல் இடையாளை மேனி மினுக்கிகளை
கன்னல் சுவையென்று எண்ணுதீர்--என்கருத்து
மொட்டுமலர் மேனி முறுவலிக்கும் பெண்ணையெலாம்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—பூவை. ஸ்ரீலஸ்ரீ அடிகள், கீழப்பூங்குடி.

★

சிங்கத் தமிழ்நாட்டார் செய்தளித்த நூல்களிலே
பொங்கும் புதுக்கருத்தைப் பூதலத்தே--எங்கெங்கும்
நட்டாயிற் றென்கின்ற நற்சேதி யென்செவியைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—சி. சுப்பையா, திருவையாறு.

★

கட்டுண்ட காதலினால் காத்திருப்பேன்; காதலியோ
சிட்டெனவே வந்திடுவாள்; சென்றிடுவேன்--வெட்கியெனை
விட்டோடிப் போனாலும் வேல்விழியால் என்விழியைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—கி. கண்ணன், அகரப்பேட்டை.

★

தீர மறங்காட்டித் தீயோன் புறங்காணும்
வீர மரபில் பிறந்தோர்க்கு--போர்முரசம்
கொட்டுவது தான்கேட்டுக் கூர்வாளை வன்கரத்தால்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—இளமுருகு, அருப்புக்கோட்டை.

★

கைக்குவளை காற்சிலம்பும் காதுக்குக் குண்டலமும்
மெய்க்குமணி மேகலையும் மென்மார்பில்--மிக்கவொளி
சொட்டுஞ்சிந் தாமணிசேர் தூய தமிழணங்கு
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ஆவிடையப்பன், பட்டுக்கோட்டை.

★

ஒத்த மனமும் உருவுமுள காதலர்கள்
மெத்தையில் கூடுமின்பம் மேல்சுகமோ?--இத்தரையில்
பட்டுக் கரத்தாலே பைங்குழந்தை பூழ்தியுடன்
தொர்ட்டாலும் தோன்றும் சுகம்.

—வேங்கடராசன், சிரங்கம்.

★

கண்ணிழலைக் கைநீரில் கண்டு கயலெனவே
எண்ணியுடன் ஏமாந்த ஏந்திழையே!--என்னுடலைக்
கட்டி யணையாது காதல் மொழிபகர்ந்து
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

★

முல்லைச் சிரிப்பும் முளரித் திருமுகமும்
கல்லை யுருக்குங் கனிமொழியும்--பல்கலைசேர்
மட்டில் தமிழணங்கு மக்கள் உளமருவித்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—சு. மாணிக்கம், பட்டுக்கோட்டை.

தோழி ! உறுபுலியின் சீற்றங்கண் டஞ்சாதான்
ஆழிசூழ் நாடாளும் அம்தோளன்--சோழன்விண்
முட்டும் மலைமார்பில் நான்புதைத் தன்னவனைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—வி. ரா. பாலாஜி, சென்னை-1.

★

கார்குழலால் மீன்விழியால் காந்தக் குறுநகையால்
ஆர்த்தஎழி லாலுலகை ஆட்டுகின்றாள்--ஈர்க்கின்ற
பட்டான மென்மேனி பாரப்பா ! அவ்வுடலைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—அ. ரெ. பொன்னையா, ஸ்ரீவில்லிபுத்தூர்.

★

அண்ணா நெடுஞ்செழியன் அன்பழகன் நம்கருணா
தென்னாட்டுச் சம்பத்துத் தேன்கவிஞர்--இன்னபிறர்
கொட்டுகிற போர்முரசைக் கொண்டொலிக்கும்
[தென்றலுடல்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—பாவநாசம், பொன்னிவளவன்.

★

பொறியைந்தும் நோகப் பிறந்தமக வாளுச்
சொறிவாயிற் பட்டுமிகச் சோர்ந்து--பிறர்வெறுக்கப்
பட்டாலும் அன்னைக்குப் பாசம்போ காதுடலைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—துரை-மாணிக்கம், புதுவை.

★

நாள்முழு தும்சுற்றி நாயோடு போராடிக்
கால்வயிற்றுக் கஞ்சிக் கலைந்திட்டேன்--கால்வயிறும்
ஒட்டியுலர் போதில் ஒருபருக்கை என்வாயைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—இரா. வை. எழில்வழுதி, இராங்கியம்.

★

கன்னல் தமிழ்ப்பேச்சும் கட்டான மெய்யழகும்
மன்னருஞ் சீர்த்திப் பரிவுங்கொள்--என்னன்பைத்
தட்டாத செல்வத்தின் தண்ணளிசேர் மூச்சென்னைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—சி. சிவராமலிங்கம், சென்னை-1.

★

முத்திட் டெனதத்தான் மும்மாதம் மூழ்கியும்யான்
எத்திக் கடைந்திட்டா ரென்றறியேன் !--இத்துன்பில்
நட்டார் அவரளித்த நற்றொடியை என்கையால்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—பி. ஏ. காசிமலை, சின்னமனூர்

★

சிற்பிசெய் பொற்சிலையே ! சிங்காரப் பைங்கிளியே
வற்றாத இன்பமீயும் வஞ்சியே--தேனமுதப்
பெட்டகமே ! தொல்லையொழி பெண்மயிலே ! நின்கரம்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—அன்பிஞெளி, கட்டிமேடு.

★

கந்தலணி கற்றாணைக் கன்னியெனக் காட்டுதல்போல்
இந்திபொது வென்கிறார் இன்தமிழா !--இந்தியைநீ
கட்டியணைத் தாலுமின்பங் காண்பாயோ? உன்மொழியைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—இரா. சண்முகம், பண்ணைக்காடு.

★

மங்கையே ! மாணிழையே ! மாய்கின்றேன், வெந்தணலில் !
எங்கோ இருந்து எரிக்கின்றாய் !--தங்கமேயுன்
பட்டுநிகர் மென்இதழைப் பாவிநான் என்கனவில்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—சொ. வள்ளிதாசன், அப்பிபட்டி.

★

உண்ண உணவின்றி, ஊரெல்லாம் சுற்றிவந்து
திண்ணையில் நான்படுப்பேன் செய்வதொன்றும்
[--தோன்றாமல்;
கட்டழகி என்கனவில் தோன்றிவந்து மென்னுடலைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ச. சங்கரநாராயணன், ராமச்சந்திரபுரம்.

★

பட்டாலே போர்த்திப் பவழவாய் காட்டியுடற்
கட்டாலே என்னைக் கவர்ந்தனையே !--கட்டழகி !
எட்டாத ஆசையா லேங்குமென் நெஞ்சைநீ
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—இரா. காளிமுத்து, பழனி.

★

சீர்சால் குறட்பா சிலம்புமணி மேகலையன்(பு)
ஆர்க்கும்நற் கோவை அடிநான்கு--பார்போற்றும்
எட்டுத் தொகையோ டேற்றபத்துப் பாட்டையும்நாம்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—க. வீ. குருசாமி, சென்னை-12.

★

பஞ்சடைந்த கண்களிலே பாயும் புனலோட்டம்
நெஞ்சடைந்த துன்ப நெருப்பினையும்--மிஞ்சிடுமே !
நட்டாற்றில் கைவிட்டார் நாதன் அவர்படத்தைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—செ. பாலு, வேலூர்.

★

போரில் பகையொழித்துப் பெற்ற புகழ்வாழ்வைப்
பாரிலிழந் தென்னைப் பிரிந்தாரே !--சீரியகல்
வெட்டில் மறையாமல் வாழும் அவர்புகழைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ஏ. மயிலன், வேலூர்.

★

கண்டுபோ லின்மொழியும் காதலெழும் நல்லழகும்
உண்டுசுவைக் குங்கொவ்வை ஒண்ணிதழும்
[--கொண்டுடுத்தும்
பட்டாரும் ஆடையுடை பாவை யுளமகிழத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—எஸ். ஏ. முத்தையா, அகூர்.

★

கொஞ்சுதமிழ் பேசுகின்ற கோமளமே ! பாலருந்தி
மஞ்சத்தில் நாம்கூட வாராயோ ?--வஞ்சனையேன் !
தட்டாமல் வந்திடுவாய் தங்கமே ! உன்னுடலைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ப. அரங்கநாதன், நாமக்கல்.

★

அள்ளி மடியிருத்தி ஆசைக் கணைக்குங்கால்
தள்ளி விடுமுனைநான் தாலாட்டி--கள்முத்துச்
சொட்டுவேன் நீமழலை சொல்லுவதை என்னுள்ளந்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—வில்லவன், பழனி.

★

ஆன்றகன்ற கல்வி அறிவமைக் தன்பினல்
தோன்றும் பிறவுயிர்த் துன்பகற்றும்--சான்றோரை
நட்டாலு மாங்கவர்சொற் கேட்டாலு னன்மனத்தால்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—பெ. பாலகிருட்டினன், சேலம்.

★

உள்ளும் பொருளனைத்தும் உள்ளடக்கி உள்ளத்தை
அள்ளும் வகையான் அழகுபட--வள்ளுவனார்
ஏட்டிலே தந்த இனிய திருக்குறளைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—செ. ப. விசுவநாதன், சென்னிமலைப்பாளையம்.

★

இன்னமுதே ! தோப்பில் இரவுமணி எட்டளவில்
என்னைநீ சந்திக்க ஒப்பிட்டாய்--சொன்னபடி
எட்டா மிலக்கத்தை எந்தன் மணிகாட்டி
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

★

சுள்ளி விறகொடித்து சூட்டடுப்பில் தீமூட்டி
புல்லரிசிச் சாதமின்று நான்சமைத்தேன--ஞொள்காதே !
பட்டினியால் வாடிடினும் பார்க்கிற் பசியடங்கும்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—து. பெருமாள், சென்னை-11.

நமது பொதுச்செயலாளர்

சந்தனத்தேவன்

'சந்தனத்தேவன்' என்னும் புனைபெயரில் எழுதியிருக்கும் இந்தக் கட்டுரையாளர் 'பொன்னி' வளர்த்த நல்ல தமிழ் எழுத்தாளர்களில் முதலிடம் பெறக் கூடியவர், அவர் இந்தக் கட்டுரையில் நமது பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைப்பற்றிச் சுவைபட எழுதியிருக்கிறார். உண்மை நிகழ்ச்சிகள் எத்துணை இன்பந்தரக் கூடியதாக அமைகிறது என்பதைப் படித்துப் பாருங்கள்.

காலை மணி பத்து; மதுரைப் பக்கமிருந்து திண்டுக்கல்லை நோக்கி வரும் ரயில்வண்டி, நிலையத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. கையில் மாலையையும் மனதில் மகிழ்ச்சியையும் சுமந்துகொண்டு பிளாட்பாரத்தில் காத்துக்கிடந்த கூட்டத்தாரிடம் மலர்ச்சி பிறந்தது; வாயெல்லாம் "வாழ்க" ஒலி!

இதுவரையில் கட்டுண்டுகிடந்த மக்கள், ஆவல் மிகுதிப்பட்டு வண்டியின் ஒவ்வொரு அறையையும் நோக்கி ஓடுவதும் ஏமாற்றத்துடன் திரும்புவதுமாக இருந்தனர்.

அப்போது இருவர் பேசிக்கொண்டனர். "குறித்த நேரத்தில் வந்து சேருவதில் பேர்பெற்ற இவர்கூடவா நம்மையெல்லாம் இப்படி ஏமாற்ற வேண்டும்?"-என்றார் ஒருவர்.

"பதவி வந்தாலே எல்லாம் அப்படித்தானப்பா! இடையில் என்ன வேலையோ? என்றார் இன்னொருவர் சற்று அலுப்புடன்.

"யார் கண்டது! ஒருவேளை அந்தப் பதவிக்குள்ள தகுதிகளில் இதுவும் ஒன்றாக இருக்கலாம்."

"எது எப்படியோ-ஆள் வரவில்லை! ஒருவேளை சோழவந்தானில் இறங்கியிருந்தாலும் இருக்கலாம்."

"சோழவந்தானில் இவருக்கென்ன வேலை"?

"அக்கா வீடு அவருக்கு அங்குதான் - அவர்கள்மீது அவருக்கு அளவிலா அன்பாம்-இந்தப் பக்கம் வந்தால் அங்கே இறங்காமல் போக மாட்டாராம்!"

"அப்படியா சங்கதி! என்ன இருந்தாலும் தனிப்பட்ட ஆளுக்கு பாசமிருக்கலாம்; பந்தமிருக்கலாம்-நாமும் அதை அனுமதிக்கலாம், ஆனால் பொதுவாழ்வில் ஈடுபடுவோர் இதையெல்லாம் பார்ப்பது அவ்வளவு அழகல்ல-விரும்பக்கூடியதுமல்ல!"

நண்பர்கள் கட்சிக்குப் புதியவர்கள். மாஸ்கோவில் ஒருகாலும், அறிவகத்தில் ஒருகாலும் வைத்துக்கொண்டிருப்பவர்கள். மேலும் பேச்சை வளர்க்க இவ்விருவருக்கும் விருப்பமிருந்தாலும் முண்டியடித்துக்கொண்டு பின்னால் வந்துகொண்டிருந்த கூட்டம் அவர்களைப் பிரித்துவிட்டது. அக்கூட்டத்திலிருந்த தொண்டரொருவர், எதிர்பார்க்கப்பட்ட தலைவர் மூன்றரை மணி வண்டியில் வருவதாகச் செய்தி வந்திருப்பதாக அறிவித்துக்கொண்டே கூட்டத்தினரைக் கலைந்து போகும்படி வேண்டினார்.

★

இப்பொழுது மணி மூன்றரை. காலையில் வந்த அதே கூட்டம் இப்பொழுதும் வந்திருந்தது. காலையில் உரையாடிச் சென்றார்களே அந்த நண்பர்களும் வருகை தந்திருந்தனர். அதுவும், என்னருகே!

வண்டியும் வந்தது. காலையில் ஏமாற்றத்தை ஏற்றிவந்த வண்டி, மாலையில் எழுச்சிக்கனலை ஏற்றி வந்தது. வந்திருந்த தலைவர்மீது பூமாரி பொழிந்தும், கைகொட்டியும், தங்களது உள்ளார்ந்த உவப்பை வெளிக்காட்டினர்.

அது சமயத்தில்தான் இது நடந்தது. மூதாட்டியொருத்தி எங்களையும் தள்ளிக்கொண்டு, முன்வந்து சிறுபிள்ளைபோல் கைகொட்டி, குதியாட்டம் போட்டார். அத்தோடு விடவில்லை! காலையில் தலைவருக்கு இருக்கவேண்டிய தொண்டுள்ளம் பற்றி விமர்சித்தார்களே அவர்களில் ஒருவரைக் கூப்பிட்டு "தம்பி! நான் அவரைப் பார்க்கவேண்டும். நான் வந்திருப்பதாக அவரிடம் கூறுங்கள்" என்று கெஞ்சினார்கள்.

"அம்மா! அவர் மந்திரியல்ல - சாதாரண நபர். உங்கள் குறைகளை நேரடியாகச் சொல்லுவதில் எவ்விதப் பயனுமில்லை"

"எனக்கு ஒரு குறையுமில்லை தம்பி! உங்க தலைவர்தான் என் உடன்பிறப்பாக்கும்" என்றார்கள் சற்றுப் பெருமையாக. நண்பர்கள் அயர்ந்து போனார்கள். நானும் அப்படித்தான்.

"உங்கள் ஊரிலிருந்து தானே அவரும் வருகிறார்"—என்றார் நண்பர்.

"தம்பி வருவது எனக்குத் தெரியாதப்பா! தற்செயலாக சோழவந்தானிலிருந்து இதே வண்டியில்தான் நான் வருகிறேன்"

"அப்படியானால் அவர் உங்கள் வீட்டிற்கு வரவேயில்லையா?"

இந்தக் கேள்விக்கு யார் பதில் சொல்வது? அவர்களோ தம்பியைப் பார்க்க வேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறார்கள். நண்பர்களோ, விளக்கம் கேட்கிறார்கள்

எப்படியோ, தன் அக்கா குழந்தைகளுடன் இதே வண்டியில் வந்திருக்கும் செய்தி அவருக்கு எட்டியது. நிழல்போல பின்தொடரும் தொண்டர்குழாம் புடைசூழத் தன் அக்காவின் இருப்பிடம் சென்றார்; நலம் கேட்டார்; குழந்தைகளைத் தூக்கி உச்சி மோந்தார்; குடும்ப விவகாரத்தைப் பற்றிக்கூட சிலபலபேசினார். புத்தனைப்போன்று கூட சபலத்துடன் அல்ல-செருமுனைக்குச் செல்லும் களம் பல கண்டகாளையைப்போலப் பிரிந்தார்-பீடு நடை போட்டார். அம்மூதாட்டியோ, பிறந்த வீட்டைவிட்டு புக்ககம் போகும் தன் பெண்ணைப் பிரிவதுபோலக் கண்கலங்கி நின்றார்கள்.

இதற்கெல்லாம் அவர் ஒதுக்கிய நேரம் எவ்வளவு என்று எண்ணுகிறீர்கள்? கண்ணிமைப் பொழுது தான்! பொதுத்தொண்டே குடும்பம், தன் கட்சியினரே சுற்றத்தினர்; கொள்கையே மூச்சு, பண்பே படைக்கலம், மக்கட் பணியே மகத்தான பணியென நடமாடித் திரியும் இவரே நம் பொதுச்செயலாளர்! அவர்தான், பலருக்குக் காவலராகவும், சிலருக்குப் பாவலராகவும் அனைவருக்குமே நாவலராகவும் விளங்கும் திரு. நெடுஞ்செழியனார் அவர்கள்.

★

சில ஆண்டுகளுக்குமுன்பு புதுக்கோட்டையில் நடக்கவிருந்த பொதுக்கூட்டத்தில் பேச, நாவலர் அழைக்கப்பட்டிருந்தார் - கழகத்தின் சார்பாக! வந்ததும் வராததுமாக அவருடன் உடனிருந்து புகைப்படம் எடுத்துக்கொள்ள விரும்பினர் கழகத் தோழர்கள். எவ்வளவோ வேண்டியும் அவர் உடன்பட்டாரில்லை. அதற்கு அவர் கூறிய காரணம் வேடிக்கையானது மட்டுமல்ல; வியக்கத்தக்கனவுமாகும். "உங்களுடன் உடனிருந்து படம்பிடித்துக்கொள்ள எனக்கென்ன தகுதியிருக்கிறது?" என்று ஒரு போடு போட்டார். கழகத் தோழர்கள் பயந்துவிட்டனர்.

"நாங்கள் என்ன பிழை செய்துவிட்டோம்"-என்று நயந்தும் பயந்தும் கேட்டனர்.

"சென்ற ஆண்டில் என்னென்ன வேலைத்திட்டங்களை நடத்தியிருக்கிறீர்கள்? எனத் திருப்பிக்கேட்டார் நாவலர்.

"மூன்று பொதுக்கூட்டங்கள் - இரண்டு கண்டன ஊர்வலம்-ஐந்து முறை துண்டுப் பிரசுரங்களை அச்சடித்து வினியோகம்......" இப்படியாக இழுத்தார் செயலாளர்.

"பின்னர்.........!" என்று வினவினார் நாவலர்.

"கழகம் பணித்த எதையுமே, நாங்கள் நடத்தியிருக்கிறோமே!" என்றார்.

"உங்கள் ஊராருக்கு நீங்கள் செய்த நன்மைகளை-வேலைத்திட்டங்களைக் கேட்கிறேன்." கழகத்தோழர்கள் பதில்கூற இயலாது விழித்தனர்.

"இல்லை" என்றனர் தோழர்கள்.

"பாமரமக்களுக்கு பங்கீடு பெறும் வழி வகைகளை விளக்கிக் கூறினீர்களா?" நாவலர் கேட்டார்.

தலையசைத்தனர் தோழர்கள்.

"நீங்கள் குடியிருக்கும் பகுதிகளில் தொத்துநோய்பரவியபோது, நீங்கள் என்ன செய்தீர்கள்?

பதில் இல்லை.

"ஊரில் தண்ணீர் நெருக்கடி ஏற்பட்டபோது, நீங்கள் செய்த தொண்டுதான் என்ன?"

குனிந்த தலையை நிமிர்க்கவே இல்லை தோழர்கள்!

கடைசியாகச் சொன்னார்; "நம் கழகத்தின் வேலை கூட்டம் போடுவது, ஊர்வலம் நடத்துவது மட்டுமல்ல, தோழர்களே! ஊராருடன் நெருங்கிப் பழகவேண்டும். அவர்கள் வாட நாம் வாழக்கூடாது. அவர்கள் வாழ்வு, நம் வாழ்வு! அவர்கள் கண்ணில் நீர்வடிந்தால் உங்கள் கண்களில் உதிரம் கொட்ட வேண்டும். இனியாவது, இந்த வழியில் ஈடுபடுங்கள். அப்படி ஈடுபட்டு அதனால் துயர்துடைக்கப்பட்டோரின் ஆயிரம்கையெழுத்துக்களை வாங்கி எனக்கு அனுப்பி வையுங்கள். அதன் பிறகு, நானே வலிய வந்து, என் செலவில், உங்களுடன் புகைப்படமெடுத்துக் கொள்ளுகிறேன்."

எவராயினும் சரி, மனதில் பட்டதை ஒளிவு மறைவின்றிக் கூறி குற்றங்கண்ட இடத்துச் சுட்டியும், குணங்கண்ட இடத்துப் பாராட்டுவதும் இவரது தலையாய பண்பெனலாம்.

★

அரசியல் கருத்துக்களில்எத்தனைதான் மாறுபாடு இருப்பினும், அது தனிப்பட்ட தோழமையையோ, பண்பையோ, மனிதத் தன்மையையோ எந்த வகையாலும் பாதிக்கக்கூடாதென்பது நாவலரின் முடிந்த முடிபாகும். இதனை உணரும் வாய்ப்பு எனக்கொருமுறை கிடைத்தது.

இது நடந்து நாலைந்தாண்டுகளாகிவிட்டன. ராஜபாளையம் ரயில்வே நிலையத்தில் நாவலரைச் சந்திக்க நேர்ந்தது. அந்த வட்டத்துச் சிற்றூர் பேரூர்களில் தன் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு ஊர் திரும்பும் நிலையில் இருந்தார்கள்.

அவ்வண்டியோ அங்கிருந்துதான் புறப்படவேண்டும். புறப்படுவதற்கோ வெகுநேரம் இருந்தது. எனவே இடைநிலை வகுப்பில் அமர்ந்திருந்த அவருடன் கட்சி குறித்தும் அதன் எதிர்காலம் குறித்தும் எதை எதையோ ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்தேன். அப்பொழுது எங்களுக்கெதிரே இருந்த மாற்றுக்கட்சி நண்பர் சற்று எழுந்து வெளிக்கிளம்பினார்.

தோற்றத்தில் நாவலருக்கு எந்த விதத்திலும் சளைத்தவரல்ல. நாவலர் பாண்டியன் என்றால், அவரைச் சோழனென்றே கூறலாம். முறுக்கிய மீசையும், ஒளிக்கும் கண்களும், அகன்ற மார்பும்...இப்படியாக இருந்தாரவர். நடை உடை பாவனையை வைத்துப் பார்த்தால் கூட, அவர் சார்ந்திருக்கும் கட்சியில் முக்கிய அங்கம் வகிப்பவராகவே தோன்றியது.

நான் மெதுவாக நாவலரிடம், "வேறிடத்தில் போய் அமரலாமா"? என்று கேட்டேன்.

"ஏன் இந்த இடத்திற்கு என்ன? நெருக்கடிதான் இல்லையே!" என்றார் நாவலர்.

"அதற்காக அல்ல! வீண் வம்பு எதற்கு?" என்று கூறி வாயிற்படியில் நின்றுகொண்டிருந்த அந்த மாற்றுக்கட்சித் தோழரைச் சாடை காட்டினேன். அவ்வளவுதான்! எங்கிருந்துதான் அந்தக் கோபம் வந்ததோ, தெரியவில்லை!

"இந்த இழிபண்பை நான் உங்களிடம் எதிர்பார்க்கவேயில்லை." என்று முஞ்சியிலடித்தவாறு கூறினார். எனக்கோ ஏன் கூறினோம் என்றாகிவிட்டது. நான் நினைத்ததெல்லாம், பாண்டியனும் சோழனும் ஒத்து வாழ்ந்ததாகப் பண்டைய சரித்திரம் கூறியதில்லையே - அந்தச் சரித்திரம் இன்று திரும்பிவிடக்கூடாதென்றகவலையில்தான்!

நான் பட்ட தவிப்பை ஒருவாறு அறிந்துகொண்டு, "நானும் மனிதன். அவரும் மனிதன். நீங்கள் மட்டுந்தான் அந்தக் கூட்டத்திலிருந்து விலகிச் செல்ல விரும்புகிறீர்கள். அது தவறு. எனக்கு எவ்வளவு பண்பு இருக்குமென உணருகிறேனோ அந்த அளவு பண்பை அவரிடமும் எதிர்பார்க்கிறேன்." என்றார்.

நான் மௌனியாய் விட்டேன். அதுதானே மூக்குடைபட்டவருக்கெல்லாம் கிடைக்கும் கடைசி அடைக்கலம்! கொஞ்சநேரத்தில் வேலை நிமித்தம் விடை பெற்றேன். வண்டியோ இன்னும் புறப்படவில்லை. பாண்டியனும் சோழனும் அளாவளாவும் காட்சியை நான் காணவேண்டும் என்று நினைத்தோ என்னவோ வண்டி நின்று கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் இரண்டு கோப்பை குளிர்பானம் அந்த வண்டிக்கு கொண்டுவரும்படி உத்தரவிடப்பட்டது. அதற்குரிய காசைக் கொடுக்க பாண்டியனும், சோழனும் போட்டி போட்டுக்கொண்ட காட்சியை என்னவென்பேன்! பண்டைய சரித்திரத்தையும், என் பண்பையும் மாற்றிய[illegible]ரே நம் பொதுச்செயலாளர்! ★

"எந்த ராஜாங்கத்திற்கும் தேவை ஒரே ராஜா! இந்த ராஜாங்கத்திற்கு நானே ராஜா! வில்லாளா! முதல் மகனுக்குத்தான் பட்டம் என்ற விதியிருக்கும்வரையில், எந்த அரசாங்கத்திலும் முதல் மகனின் கதி இதுதான்! நினைவிருக்கட்டும்."

—செங்கணன்;

விஜயநகர சாம்ராஜ்யத்தின் அழிவிற்குப் பிறகு, தென்னாட்டில் தலைதூக்கிய பாளையங்களில், வேல்பாளையத்திற்கும் பனிப்பாளையத்திற்குமிடையே நடைபெற்ற சம்பவங்களைக் கொண்ட கதைதான் "நானே ராஜா!"

◉

நடிகர்கள் :

சிவாஜி கணேசன்
டி. எஸ். பாலையா
எஸ். வி. சகஸ்ரநாமம்
எஸ். வி. சுப்பையா
முஸ்தபா
கோபாலகிருஷ்ணன்
எம். என். ராஜம்
ஸ்ரீரஞ்சனி
கிரிஜா
மற்றும் பலர்.

◉

பாடல்கள் :

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்
கே. பி. காமாட்சிசுந்தரன்
லட்சுமணதாஸ்
குயிலன்

◉

இசையமைப்பு :

டி. ஆர். ராம்நாத்.

◉

ஒளிப்பதிவு :

ஆர். ஆர். சந்திரன்.

◉

பாடல்கள் ஒலிப்பதிவு :

இ. ஐ. ஜீவா.

◉

ஆர்ட் டைரக்ஷன் :

ப. அங்கமுத்து.

◉

டைரக்ஷன் உதவி :

க. நாராயணன்.

◉

எடிட்டிங் & டைரக்ஷன் உதவி :

ஜே. பி. ராஜு.

◉

ஸ்டுடியோ :

வாஹினி.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர்: கண்ணதாசன் [illegible]